அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

Page-363

MAHAMAHOPADHYAYA DR. U. V. S. LIBRARY BESANT NAGAR, MADRAS-90

மலர் 4 இதழ் 8 விலை அ.4	நந்தன ஞு கார்த்திகை மீ நவம்பர் — 1952	வருட சந்தா ரூ. 2-4-0

ACC. No. 18581.



பரமசிவனுடைய உண்மைத் தன்மைகளை
ததீசி மாமுனிவர் தக்கனுக்கு எடுத்துக் கூற
(கந்தபுராணச் சித்திர விளக்கம்—42)

பொருளடக்கம்

366

			பக்கம்
1.	பக்தி ரஸம்	(திருப்புகழ் மணி) ...	337
2.	கோலக் குறத்தியுடன் வருவான்	(மோ. ஸ்ரீ. செல்வம்) ...	339
3.	அஷ்டோத்தர சதம்	(க. சோமசுந்தரம் செட்டியார்) ...	343
4.	பக்தியும் இசையும்	(கீழ்வேளூர் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை) ...	349
5.	ஆத்ம போதம்	(நா. பிச்சுமணி. கி. சுப்ரமண்யன்) ...	355
6.	வட பழநியாண்டவர் பாமாலை	(T. துரைசாமிப் பிள்ளை) ...	359
7.	மங்களவல்லி	(ரசபதி) ...	361
8.	கோயில்கள்	(ஸ்ரீ வத்ஸன்) ...	369
9.	நானும் சிரித்தேன்	வித்வான். ரு. நடேசகவுண்டர் ...	379
10.	The divine child	(Thiruppugal Mani) ...	383

கர வருஷ பன்னிரண்டு இதழ்களும் பயிண்டு செய்யப்பட்டது ரூ. 3—6—0. தபால் செலவு அணா 6. வேண்டுவோர்கள் ரூ. 3—12—0 அனுப்பவும். வி. பி. இல்லை.

'அமிர்தவசனி'யின் முன்னேற்றத்தைக் கருதி ரூ. 50—0—0 நன்கொடையாக உதவும் அன்பார்ந்த நேயர்களுக்கு ஆயுள்வரை பத்திரிகை அனுப்பப்பெறும்.

அமிர்தவசனி சந்தா அறிக்கை

சித்திரை முதல் பங்குனி முடிய வருட சந்தா இலங்கை உள்பட உள்நாட்டிற்கு ரூ. 2—4—0 நான்கு வருட சந்தா ரூ. 8—4—0 அயல் நாடுகளுக்கு வருட சந்தா ரூ. 3—0—0 4 வருட சந்தா ரூ. 11—0—0.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

For **PAPERS** INDIAN & FOREIGN

NEWSPRINT — CREAMLAID — PRINTING BOND — TISSUE — BUTTER — POSTER — ART KRAFT — BOARDS, ETC., ETC.,

Deccan Blue Match, Tea wrapper & Duplicating paper available any quantity

P. S. N. M. Ramalingam Chettiar & Co.

46, ANDERSON STREET, MADRAS-1

PHONE: 55004 - POST BOX 1563 - GRAMS: "DRAWING"

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர்: [illegible] முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 4	நந்தன ஹு கார்த்திகை மீ நவம்பர்—டிசம்பர் 1952	இதழ் 8

பக்தி ரஸம் (13)

திருப்புகழ் மணி

"பக்தியில் தொடர்ந்தவர் பரமயம தானவர்
அத்தலத்தில் இருந்த பேர்கள் அவரெனக்கு நாதரே"

என்றார் சித்தர். புகைவண்டித் தொடரில் ஏறிவிட்டால் முன் வண்டி பின் வண்டி என்ற பேதமன்றி, எப்படி எல்லோரையும் குறிப்பிட்ட ஊருக்கு இழுத்துச் செல்கின்றதோ அதே மாதிரிதான் பக்தியின் தொடர். பக்தி என்ற வண்டித் தொடரில் ஏறிவிட்டால், ஆண்டவன் எனும் என்ஜினால் (god engine) இழுக்கப்பட்டு, முக்தி அல்லது பேரின்ப வீடு எனும் ஊரில் கொண்டு போய் விட்டுவிடப் படுகின்றான். God word Ho! என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். ஆண்டவனை நாடிச் செல்லும் வண்டியில் ஏறிவிடு

மூர்த்திதலந் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.

கிறார்கள். ஆண்டவனிடத்தில் பெருத்த அன்பு செலுத்துகின்றவன் அவன் பக்தி என்ன ஆகு மென்று அர்ச்சகன் ஸ்ரீ கிருஷ்ணனை வினவினன். ஜன்மத்தில் ராஜரீக நிலையிலோ, ஞான உத்க்ருஷ்டக் குடும்பத்திலோ பிறந்து, புண்ய வசத்தால் மறு பெரிய உலக இன்பங்களை நுகர்ந்தும், தன்னை அறியாமலே பூரண பலத்தை யடையாத பக்தியோகம் அவனை மேற்கொண்டு ஆண்டவன் பூரண அருளில் கொண்டு சேர்த்துவிடும் என்றார். சிறிது பக்தி செய்து கத்தரித்துப் போன பக்திகூட விருதா வாகாது என்ற தீர்மானத்தை ஸ்ரீ கிருஷ்ணன் வெளியிட்டார். முக்தியும் பெருவாழ்வும் அடையச் செய்வது பக்திதான். ஷடானனம் என்னும் திவ்ய நாமத்தைச் சொல்ல விருப்பம் ஏற்பட்ட ஞான்றே; முருகன் உலகம் வந்து நம்மேல் மூண்டுவிடுகின்றது. 'சரவணபவ' என்ற திவ்ய அக்ஷரங்களால் நம்மையே நாம் முருகன் உருவகமாக்கிக் கொள்கின்றோம். தெய்வம் சப்த ஸ்வரூபமாதலால் ஷடாக்ஷர ஜபத்தால் சாரூபத்தை அடைந்துவிடலாம். பகவானை த்யானிக்க த்யானிக்க, இந்த உலகத்திலேயே ஆண்டவன் ரூபத்தில், ஆண்டவன் சமீபத்தை அடைந்து விடலாம். பகவான் நினைவு கொண்டு தியானம் செய்யவேண்டும் என்ற நிலையைத் தாண்டி, ஸதா காலமும் முருகன் ஸ்மரணமாய் இருக்க கற்றுவிட்டால் அதுவேதான் ஸாயுஜ்யமாம். முருகா என்ற நாமத்தில் ஆரம்பித்த மனம் மனிதனை முருகனுக்கி

விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்புமலர் காய்கனிபோல் அன்றே பராபரமே.

விடுகின்றது. ஸ்ரீமத்தாதேவியார் ஸ்ரீசஷ்டிமாலையில் கண்டவாறும், அருணகிரி உபதேசித்தவாறும் தொண்டர்கள் நிலை விசேஷத்தை வகுக்கும் போது, "சாலோக சாரூப சாமீப தொண்டர் பெருமாளே" என்று பாடியுள்ளார். நாமம் என்பது ஓர் சக்தி: அச் சொல்லில் உள்ளது ஜோதி. பக்தியின் தொடர் நாம சப்தத்தில் ஆரம்பித்து, ஜோதியின் ஐக்கியத்தில் கொண்டு விடுகின்றதாம். தொண்டர் கூட்டம் வாழி வாழி வாழியே.

"கோலக் குறத்தியுடன் வருவான்"

(மோ. ஸ்ரீ. செல்லம்)

அடியார்களைக் காப்ப தொன்றையே தன் கடனாகக் கொண்டவன் முருகன். "அடியேனை சுகப்பட வேவை, கடனும் இதுக்கன மாகும்—முருகோனே" என்கிறார் அருணகிரிப் பெருமான். "அடியேனைச் சுகப்பட வைப்பது உன் கடன்" என்று முருகனுக்கே அவன் கடமையை நினைப்பூட்டுகிறார் பக்த சிகாமணி. "ஏழைகள் வியாகுலமி தேதென வினவி லுனை, யாவர் புகழ்வார் மறையும்—என் சொலாதோ?" ஏழைகளாகிய பக்தர்களின் வியாகுலம் எது என்பதை அறிந்து அவர்கள் முறையிடும் முன்பே, தாயெனப் பரிந்து காப்பது முருகனுக்குக் கடன். அவன் தந்த வேதமே இதை அவன் கடமையாக விதிக்கிறது என்று காட்டுகிறார் அவர். எங்கெங்கெல்லாம் பக்தர்களின் அஞ்சுமுகம் தோன்றுமோ அங்கங்கெல்லாம் ஆறுமுகம் தோன்றும்—தோன்றியே தீரும்—

இன்றோ இருவினைவந் தேறியது நானென்றோ
அன்றே விளைந்ததன்றோ ஆற்றேன் பராபரமே.

என்கிறார் நக்கீரர். "யாதுமிலே யற்றலையும் ஏழுபிற விக் கடலே, ஏறவிடு நற்கருணை ஓடக்காரன்" அவன்.

இப்படியாகத் தம் பக்தர்களைக் காக்கச் செல்லும் முருகன் அதி வேகக்காரன். உலகமெங்கணும் நொடிப் பொழுதில் சுற்றிவரும் மயிலே அவன் வாகனமாகக் கொண்டிருப்பது, உலகத்தில் எங்கே உள்ள பக்தன் எப் போது நினைத்தாலும் போய்க் காத்தலைக் குறிப்பதற்கே யாம். குக்குடமும் வேலும் மயிலும் குறமானும், அருளப் போகும் முருகனுக்கு நீங்காத பக்கத் துணைகள். ஸம்சார மாகிய இருள்நீங்கி ஞான சூரியன் உதயமாகிறான் என்று எச்சரிக்கக் குக்குடம். சர்ப்பமாய், மக்களை விடாது சுற்றி நெருக்கும் வினையைச் சாட மயில்; காமக் குரோதாதிக ளாகிய மலைகளைத் தகர்த்துப் பொடியாக்க வேல். கல்லாகிய மனத்தையும் உருக்கிக் கனிய வைத்து, அமுதமாகிய பக்தியைப் புகட்டத் தாயாகிய குறமான். பக்தியாகிய அமுதத்தின் சாரமாகிய ஞானத்தைத் திரட் டித்தர முருகன்.

தனியாக வரும் முருகன்—ஆண்டியாகிய முருகன்— ஞானயோகமாகிய பெருந்தவம் உடையார்க்குக் கேவல ஞானத்தை அருளும் திறம் ஒன்றே உடையவன். அவனால் நம்போன்ற பாவ ஜீவர்களுக்கோ, ஞானம் பழக இயலாத அசக்தர்களுக்கோ பயன் ஒன்றும் இல்லை. சக்தியை, நம் தாயை—பிரிந்துநின்ற தக்ஷிணா மூர்த்தி, சன காதியர்களான பரம ஞானிகளுக்கு மட்டுமே மோனோப தேசம் அருளும் பெருமை உடையவன் ஆவதுபோல, ருக்மணி, பாமா ஆகிய நாச்சியார்களைப் பிரிந்து நின்ற கிருஷ்ணன், ஞானோபதேசமான கீதாசாரியனாகவே ஆவது போல,

---

என்னைக் கெடுக்க இசைந்த இருவினைநோய்
தன்னைக் கெடுக்கத் தகாதோ பராபரமே.

சக்தியைப் பிரிந்திருக்கும் மூர்த்தி சம்மாரமூர்த்தி யாகும்; அல்லது கேவல ஞான மூர்த்தியாகும் சக்தியைப் பிரிந்த தக்ஷிணாமூர்த்தி சனக சனகாதியர்களுக்கு ஞானமூர்த்தி யாகவும், மன்மதனுக்கு, காமாதிகளால் பந்தப்பட்ட ஆத்மாக்களுக்கு—சம்மார மூர்த்தியாகவும் நின்றான். ஆனால் சக்தியோடு கூடிய மறுகணமே அவன் கோபம் மாறி மன்மதனுக்குப் போகமும், பக்தியும், மோக்ஷமும் தரும் கருணை மூர்த்தியாக மாறினான். "ஆதி மூலமே" என்ற குரலைக்கேட்டுச் சக்தியாகிய லக்ஷ்மியை விட்டு ஓடோடியும் வந்த பரந்தாமன், சம்மார மூர்த்தியாகி முதலையைச் சக்கரத்தால் கொன்றான். இலக்குமி அவனை வந்து அடைந்த கணமே கருணை மூர்த்தியாகி கொன்ற முதலைக்கும், பக்தியும்—மன உருக்கமும்—முக்தியும் தந்தான். சக்தியர் இல்லாமல் தனியே நின்ற முருகன் சம்மார மூர்த்தியாகிச் சூரபத்மன் முதலிய அரக்கர்களைக் கொன்றான்; தேவசேனை, வள்ளி ஆகிய சக்திகளைப் பெற்றபின் அவன் கருணை மூர்த்தியாகவே நிற்கின்றான். ருக்மணியோடும் பாமாவோடும் இணைந்துநின்ற கிருஷ்ணன், தன்னை நாடிய குசேலனுக்குக் கருணைமூர்த்தியாக நின்று போகம், பக்தி, ஞானம் எல்லாவற்றையும் அருளினான். சக்தியாகிய சீதா பிராட்டியோடு ராமன் சேர்ந்திருந்தபோது, காகாசூரன் சீதைக்குச் செய்த அபசாரம், ராவணன் செய்த அபசாரத்தைவிட எவ்வளவோ மடங்கு பெரியது. என்றாலும், காகாசூரன் மன்னிப்பும் கருணையும் பெற்றான். ஆனால் சக்தியினின்றும் ராமனைப் பிரித்த ராவணன், தனி ராமனால் குலநாச மடைந்தான்.

இந்தத் தத்துவத்தை நன்கு அறிந்தேதான் அருணகிரிநாதர் நம் போலியர்களுக்கு அருள முருகனைக் கோலக்

வல்லமையே காட்டுகின்ற மாமாயை நானொருவன்
இல்லையெனின் எங்கே இருக்கும் பராபரமே.

குறத்தியுடன் இணைத்தேகூறுகிறார். சக்தியாகிய அது வும், இச்சா சக்தியாகிய வள்ளி நாயகியாரோடு சேர்ந்த முருகன்தான், எந்தவிதத் தகுதியும் இல்லாமல் "அபயம் அபயம்" என்று அபயக்குரல் மட்டுமே இடும் தகுதி யுடைய ஆத்மாக்களுக்கு வேண்டிய கருணைகாட்டி போக, பக்தி, ஞானங்களை அருளும் பரம கருணை மூர்த்தியாவன். குறத்தியுடன் வருபவனே நமக்கேற்ற முருகன்.

சக்தியுடன் வருவதுதான் கருணைக்குக் காரணம் என்றால், தேவயானையோடு வருவான்" என்றும் சொல்ல லாமே. குறத்தியுடன், வள்ளியுடன் என்றே திரும்பத் திரும்பச் சொல்வானேன் என்ற வினா எழலாம். தேவ யானை யம்மையார் இந்திரன் மகள் என்ற தகுதியால் வெற்றிப் பரிசாக முருகனை அடைந்த தாய். அவள் பிறந்ததும், வளர்ந்ததும், முருகனை அடைந்ததும், ஞானி கள் பெருமானை அடைவதுபோலத் தன் தகுதியால். ஆனால் வள்ளி நாயகியாரோ நம்மைப்போல ஒரு தகுதியும் அற்ற ஆத்மாவாகக் கொலையையே தொழிலாகக் கொண்ட, வேத, சாஸ்திர, புராண, ஞான வாசனை யறியாத குறவரிடையே வளர்ந்து, முருகன் என்ற ஒரு சொல்லை நினைத்த தகுதியால் மட்டுமே,முருகனே கருணைப் பெருக்கால் தானே வந்து ஆட்கொள்ளும் பேறு பெற்ற தாய். வள்ளி யம்மையாருக்குத்தான் நம் போன்ற ஏழை களின் தகுதி யின்மையும், ஏக்கமும், வலிய ஆட் கொண்டாலன்றிக் கதிபெற இயலாத சிறுமையும் நன்கு தெரியும். நமது கட்சியை நன்றாக எடுத்துப் பேசிப் பரமனாகிய முருகனுக்குக் கருணை ஏற்படச் செய்யும் ஆற்றலும், அதற்கு வேண்டிய அநுபவமும் இந்தத் தாய்க்கே நிரம்ப உண்டு. நமது குறையை முடித்துக்

சினமிறக்கக் கற்றாலுஞ் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே.

கொள்ளத் தக்க பக்கபலமாக நிற்கக் கூடியவர் இந்த அம்மையார்தான் என்பதை நன்கு உணர்ந்தவர் அருணகிரியார். அதுதான், குறத்தியுடன் அவன் வருவதையே விரும்புவர் அவர், தகுதி ஒன்றும் இல்லாத ஆத்மாக்களைக் காக்க.

தேவயானையார் வெற்றிப்பரிசாக முருகனுக்கு அளிக்கப்பட்ட மனைவி. ஆனால் வள்ளி நாச்சியாரோ முருகன் தானே தேடிச்சென்று, படாத பாடுபட்டு, கேட்காத ஏசலையெல்லாம் ஏற்று பதம் பணிந்துகொண்ட மனைவி. தானாகத் தன்னை நாடிவந்த மனைவிக்குக் கணவனிடம் இருக்கும் செல்வாக்கைவிடத் தானே தேடிச்சென்று பெற்ற மனைவிக்குக் கணவனிடம் இருக்கும் செல்வாக்கு நிச்சயமாக அதிகமாகத்தானே இருக்கும். எந்தத் தாய்க்குத் தந்தையிடம் செல்வாக்கு அதிகமோ, அந்தத் தாயின் தயவைத்தானே நிறையத் தவறுசெய்து பெருங்கருணை நாடும் குழந்தை தேடவேண்டும்? குறத்தியுடன் வருவோனாக முருகனைச் சொல்ல இதுவும் ஒரு தக்க காரணமாகும்.

அப்பர் அஷ்டோத்தரசதம்

(க. சோமசுந்தர செட்டியார்)

இக்கட்டுரையின் நோக்கம், தமிழன்பர் பலர் சிவாலயங்களில் சிவபெருமானுக்கு அர்ச்சனை செய்யும் மந்திரங்கள் வடமொழியில் உள்ளனவே, அவ்வர்ச்சனையைத் தென்மொழியில் ஏன் செய்யக் கூடாது? என்பார்கள். அவர்களுக்காக இது எழுதப் பெற்றது.

வாதுக்கு வந்தெதிர்த்த மல்லரைப்போல் பார்த்தமனம்
ஏதுக்குக் கூத்தாடு தெந்தாய் பராபரமே.

2. சைவர்கட்குப் பிரமாண நூல்கள் வேதமும் சிவாகமமுமாம் என்பதை மறத்தல் கூடாது. இவைகள் வடமொழியி லுள்ளன. இவற்றின் சாரத்தை எடுத்து இனிய தீந்தமிழினுள் இயற்றித் தந்தவர் நம் நால்வர் பெருமக்களும் ஏனையோரும் என்பதனையும் மறத்தல் கூடாது. இவையே தேவாரம் முதல் பெரிய புராணம் ஈறாகவுள்ள பன்னிரு திருமுறைகளாகும். இதனைத்தான் தமிழ்வேதம் என்றும் சொல்லுவார்கள். எனவே, இத்தேவாரப் பதிகங்களை யோதுதலே அர்ச்சனையாகும். ஏன்? "அர்ச்சனை பாட்டேயாகும்" என்றார் தெய்வச் சேக்கிழார் பெருமானும்.

3. பரமேஸ்வரனுக்கு ஒரு பெயரல்ல. பல வுண்டு. அவை கணக்கி லடங்கா. "ஒரு நாமம் ஒருருவம் ஒன்று மில்லாருக்கு ஆயிரந் திரு நாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ?" என்பது மணி மொழி. இங்கே ஆயிரம் என்பது அநேகம் என்னும் பொருளில் வந்தது. வேதத்தி லுள்ள பல பெயர்களைப் பெரியவர்கள் ஒருதொகுதியாகச் "சகஸ்த்ரம்" (ஆயிரம்) என்றும், "அஷ்டோத்தர சதம்" (108) என்றும் நமக்குக் கொடுத்துள்ளார்கள். அவற்றை ஒலித்து, அர்ச்சனை செய்து அப்பரமேஸ்வரனைத் திருப்தி செய்வித்து நாம் அனைவரும் உயிருக்கு உறுதி தரவல்ல மோக்ஷத்தைப்பெற முயல்வோமாக!

4. வடமொழியில் உள்ள "நம" என்பது தான் தமிழில் "போற்றி" என வரும். இனி வடமொழியில் "சிவாயநம:" என்றாலும் தென் மொழியில் "சிவனுக்குப் போற்றி" என்றாலும் ஒன்றே. ஆலயத்தில் தொன்று

சூதாடு வார்போல் துவண்டு துவண்டுமனம்
வாதாடின் என்னபலன் வாய்க்கும் பராபரமே.

தொட்டு வழங்கிவரும் வழக்கத்தை மாற்றாமல் நாம் செய்யும் அர்ச்சனையை நம் வீட்டிலோ, அல்லது பரமேஸ்வரன் சந்நிதியிலோ தமிழிலேயே செய்து கொள்ளலாம். இதனைத் தடுக்க ஆண்டவனாலும் முடியாது. இனி விஷயத்தின் மேல் செல்லலாம்.

5. இக்கட்டுரையின் தலைப்பை "அப்பர் அஷ்டோத்தர சதம்" என்று போட்டதன் நோக்கம், அப்பர் சுவாமிகள் தாம் பாடியுள்ள திருத்தாண்டகம் ஒன்றில், சிவபெருமானைத் தமிழிலேயே 103 போற்றி என்ற சொல்லால் ஒரு அஷ்டோத்தர சதம் இயற்றி யுள்ளார்கள். வடமொழி தென் மொழி ப்ரச்னைகள் நம் காலத்தில் இயற்கையாய்த் தோன்றும். அப்போது இப்பதிகம் உதவுவதாக என்றே நம்மிடத்தில் கருணைகொண்ட தீர்க்க தரிசிகளான அப்ப மூர்த்திகள் சுமார் 1300 ஆண்டுகட்கு முன்னரே செய்து அருளினார்கள். அவர் தம் கருணையும், அன்பும் எண்ணி அவற்றிற்கு ஒரு வணக்கம் செய்வோமாக.

6. அப்பர் சுவாமிகள் அருளிச் செய்த தேவாரப்பாட்டுக்கள் மொத்தம் 4,90,000 ஆகும். பிரமாணம் "பதிகம் ஏழெழுநூறு பகருமாகவியோகி" என்றார் நம்பியாண்டார் நம்பிகள். (700+700) "இணை கொள் ஏழெழுநூறு இரும் பனுவல் ஈன்றவன் திருநாவினுக்கரையன்" என்றார் நம்பியாரூரர் பெருமானும். (700+700) [4,90,000 பாட்டுக்கள்] இவற்றுள் நமக்கு இறைவனருளால் கிடைத்துள்ளவை 313 பதிகங்களாகும். இவற்றைத் திருமுறை வகுத்தவர் பின் மூன்றாக வகுத்து அவற்றை வரிசையில் 4, 5, 6 என வைத்துச் சென்றார்கள். ஆறாந்திருமுறை "திருத்

பொறிவழியே ஏழை பொறியாய் உழல்வதுநின்
அறிவின் விதித்தவிதி ஆமோ பராபரமே.

தாண்டகம் " எனப்பெறும் இது 99 பதிகங்கள்கொண்டு விளங்கும். இவற்றுள் பல போற்றித் திருத்தாண்டகங்கள் உண்டு. நமக்காக அருளிச் செய்யப் பெற்றதை நாம் தினந்தோறும் ஓதி உய்வோமாக!

திருவாரூர்

திருச்சிற்றம்பலம்

1. கற்றவர்கள் உண்ணுங் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லும் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுத மானாய் போற்றி
அல்லலறுத்து அடியேனை யாண்டாய் போற்றி
மற்றொருவர் ஒப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்று மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 9

2. வங்கமலி கடனஞ்சம் உண்டாய் போற்றி
மதயானை யீருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரு நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித்தோ லாடைக் குழகா போற்றி
அங்கணனே யமரர்கள்தம் மிறைவா போற்றி
ஆலமர நீழல் அறஞ் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி 9

3. மலையான் மடநதை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாதம போற்றி போற்றி

பாசசா லங்கள் எல்லாம் பற்றுவிட ஞானவைவாள்
வீசுநாள் எந்நாள் விளம்பாய் பராபரமே.

நிலையாக வென்னெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமேல் ஒற்றைக் கண் ணுடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைமேல் ஏந்தீ போற்றி
ஏழ்கடலும் ஏழ்பொழிலு மானாய் போற்றி
சிலையாலன் றெயிலெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி . 10

4. பொன்னியலு மேனியனே போற்றி போற்றி
பூதப் படையுடையாய் போற்றி போற்றி
மன்னியசீர் மறைநான்கு மானாய் போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க் குண்மையனே போற்றி போற்றி
உலகுக் கொருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 15

5. நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளில் ஆட லுகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதி போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 12

6. சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி

எந்தவுட லேனும் எடுத்தவுடல் நல்லதென்று
சிந்தைசெய வந்ததிறஞ் செப்பாய் பராபரமே.

அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 14

7. வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான்பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி
குரை கழலால் கூற்றுதைத்த கோவே போற்றி
நம்புமவர்க் கரும் பொருளே போற்றி போற்றி
நால்வேத மாறங்க மானாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 10

8. உள்ளமா யுள்ளத்தே நின்றாய் போற்றி
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்கோன் தோள்துணித்த மைந்தா போற்றி
வெள்ளை யேறேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கைச் சடையாய் போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 10

9. பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்குந் தேவே போற்றி
திருமாலுக் காழி யளித்தாய் போற்றி
சாவாமே காத்தென்னை யாண்டாய் போற்றி
சங்கொத்த நீற்றெஞ் சதுரா போற்றி

பொய்யெல்லாம் ஒன்றாய்ப் பொருந்திவைத்த பொய்யுடலை
மெய்யென்றால் மெய்யாய் விடுமோ பராபரமே.

சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 10

10. பிரமன்றன் சிரமரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கு முக்கண்ணு முடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற வெளியாய் போற்றி
அருமந்த தேவர்க் கரசே போற்றி
அன்றரக்கன் ஐந்நான்கு தோளுந் தாளும்
சிரநெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 9

திருச்சிற்றம்பலம்.

பக்தியும், இசையும்

கீழ்வேளூர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை

தந்யாசி ராகம்: 8-வது கர்த்தாவாகிய தோடி ராகத்தில் ஜன்யம். ஆனால் இதனில் வரும் காந்தார, நிஷாதங்கள், திஸ்ருதி, காந்தார, நிஷாதங்கள் ஆகும். தோடி ராகத்திற்கோ, த்விஸ்ருதி, காந்தார, நிஷாதங்கள் கணிக்கப்பட்டுள்ளன. ஆனால் நான்கு ஸ்ருதிகளைக் கொண்ட முழுச்சுரங்களை இரண்டிரண்டாகப் பிரித்து பன்னிரண்டு அரைச் சுரங்களாக வகுத்து, மேலும் இதனிலேயே ஸ்வர ஸ்த்தானத்தை ஒலிக்கும் முறையில் அசைத்தும், நேராக நின்று ஸ்வர எழுத்துக்களை, ரியைக் "கா" வென்றும், கவை, ரி, என்றும், தவை "நி" என்றும்,

---

மின்னனைய பொய்யுடலை மெய்யென்று நம்பிஇயோ
நின்னை மறக்கை நெறியோ பராபரமே.

கியை "த" வென்றும் வரி வடிவத்தை மாற்றிப் பிடிப்ப தால் மாற்றமான ப்ராவ உணர்ச்சி இன்பம் ஏற்படுவதால் அந்த இலக்கணத்தைக் கொண்டும், பதினாறு ஸ்வரங்களி லேயே, எழுபத்திரண்டு மேளகர்த்தாக்கள் செய்திருப் பதால் தங்யாசி போன்ற ராகங்கட்குக் கர்த்தா தனியாக இருக்க இயலாது போயிற்று. அதனாலேயே, பெரும் பாலும் பொருந்துகின்ற தோடி ராகத்தில் இணைத்து அத னில் ஜன்னியம் என்று பெரியோர்கள் இலக்கணம் வகுத்து வைத்துள்ளார்கள்.

ஆகவே இந்த நுண்மையை குருமுகமாக நேரில் பாடக்கேட்டுத் தெரிந்து கொண்டால் தான் இசைக் கலை யின் நுண்மா நுண்மையான ஒலி நுட்பச் சிறப்பை அறிய முடியும். இப்படி அநேக ஜன்னிய ராகங்கள் உள்ளன. அவைகட்கெல்லாம் பொருந்துமாறு கர்த்தா ராகங்கள் வகுக்கப்படவில்லை என்பதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளப்பட வேண்டிய விஷயமாகும்.

ராகம் : தங்யாசி

தாளம் : ஆதி, இரண்டு களைச்சவுக்கம்.

ஔடவ, ஸம்பூர்ண உபாங்க ராகம், இதனில் வரும்; காந்தார, நிஷாதங்கள், நெடிலாக நீண்டே ஒலித்து, மற் றும் ஆரோஹண மார்க்கத்தில், காந்தார, நிஷாதங்கள் முனைத்தும், அவரோஹண மார்க்கத்தில் காந்தார, நிஷா தங்கள் தன்னிலையில் கீழ் ஸ்வரத்தை அநுசரித்து அசைந் தும் ராக பாவத்தை உணர்த்தும். இது போன்ற இலக் கணங்களே தான் கர்நாடக சங்கீதத்தின் நுண்மை இலக் கணச் சிறப்பாகும்.

நித்தியமொன் றில்லாத நீர்க்குமிழி போன்றவுடற்கு
இத்தனைதான் துன்பமுண்டோ என்னே பராபரமே.

ஆரோஹணம் : ஸ கா ம ப நீ ஸ்
அவரோஹணம் : ஸ் நி த ப ம க ரி ஸ.

பல்லவி

த்யாநமே வரமைந கங்கா

ஸ்நாநமு ஓ மநஸா — த்யா

அனு பல்லவி

வாநநீட முநுக முநுக லோநி

வஞ்சந த்ரோஹ மதா ஹங்காரமு போனு — த்யா

சரணம்

பரதன நாரீ மனுலனு தூரி

பரநிந்தல பரஹிம்ஸல மீறி

தரனு வெலயு ஸ்ரீ ராமுனி கோரி

த்யாக ராஜ — தெலுஸ — கொந்த ராம — த்யா

கருத்துரை விளக்கம்

ஓமநஸா) ஏமனமே! (ராமத்யானமே வரமைன கங்கா ஸ்நானமு) ஸ்ரீ ராமச்சந்த்ரனை நினைந்து நினைந்து தோத்திரம் செய்து மனத்தை ஆனந்தமுற வைத்திருப்பதே ஸ்ரேஷ்டமான கங்கையில் ஸ்நானம் செய்ததான நற்

ஞாலத்தை மெய்யெனவே நம்பிநம்பி நாளுமென்றன்
காலத்தைப் போக்கியென்ன கண்டேன் பராபரமே.

பலனைத்தரும். (வான நீட முறுக முறுக) கங்கை யானாலும் சரி, காவேரியானாலும் சரி மற்றுமுள்ள, புண்ணிய தீர்த்தம் என்று சொல்லத் தக்க எந்த நதிகளும், வானத்திலிருந்து விழுந்த மழைத்துளிகளால் ஆனதுதான். ஆதலால், அந்த ஜலத்தில் நீ எத்தனை தரம் முழுகி முழுகி எழுந்து ஸ்னானம் செய்திட்ட போதிலும், (லோபி வஞ்சன த்ரோஹ மதா அஹங்காரமு போனு) உன்னுடைய மனத்திலுள்ள வஞ்சனை, பிறரை த்ரோஹம் செய்யும் கெட்ட எண்ணம், நான் என்னும் மமதை அகங்காரம், மதத்திமிர் ஆகிய இந்த கெட்ட எண்ணமாகிய அழுக்குப் போய் விடுமா? ஆதலால், இதற்கு ராமத்யானமாகிய ஸ்ரேஷ்டமான த்யானமே சிறந்த கங்கையின் ஸ்நானமாகும். (வேண்டுமானால் வானத்திலிருந்து விழுந்த நீரால் உடலில் உள்ள அழுக்கு கழுவப்படலாமேயல்லாமல், உனது மன அழுக்கு ஒருபோதும் கழுவப்படமாட்டாது என்று கருதுவாய்).

மற்றும், நீ (பரதன நாரீ மணுலனுதுரி) இன்னொருவருடைய தனத்திற்கும், மற்றவர்களுடைய மனைவியர்களாகிய பெண்களிடத்திலும் உள்ள ஆசையை விடுத்து, (பரநிந்தல பரஹிம்சல மீறி) மற்றவர்களை தூஷித்தல் மக்களைத் தொந்திரவு செய்தல் ஆகிய கெட்ட செய்கைகளையும் விட்டுவிடு; (தரனு வெலயு ஸ்ரீ ராமுனி கோரி) மேல் உலகம் என்று சொல்லத் தக்க வான உலகத்தில் உள்ள தெய்வமாகிய ஸ்ரீ ராம பிரான், உனக்காக இந்த உலகத்தில் வந்து தோன்றி இங்கேயே தெய்வீக ஸ்வரூபம் தாங்கி, கருணையோடு மனித ரூபந்தாங்கி வீற்

பொய்யுலக வாழ்க்கைப் புலைச்சேரி வாதனைநின்
மெய்யருளின் மூழ்கின் விடுங்காண் பராபரமே.

திருக்கின்றான்; மேலும் கருணை புரிவதற் கென்றே கருணை யின் பிறப்பிடமான ஸீதா தேவியாரையும் பக்கலிலே உடையவனாய் உள்ளான்; அவனை நீ எப்போதும் அண்டி வாழ்பவனாக மனத்துள்எண்ணி, அவனுடைய க்ருபையை எப்போதும் வேண்டி, அவனுடைய நினைவே உடைய வனாக இருந்து வாழ்ந்திடு. (த்யாக ராஜு தெலுசு கொன்ன) அந்த ராமனை இப்படிப்பட்ட மூர்த்தி என்று இந்த த்யாகராஜன் தெரிந்து தான் சொல்லுகிறான்; (ராமத்யானமே வரமைன கங்கா ஸ்னானமு ஓமநஸா) ஏ மனமே உனக்கு உண்மையானதும், ஸ்ரேஷ் டமானதும், உன்னைப் பாவனமுறச் செய்வதும் ஆன, கங்கா ஸ்னானம் ராமத்யானமே யல்லாமல், இந்த வானத் திலிருந்து விழுந்து ஓடுகிற மழை ஜலமாகிய ஆற்று ஜல மல்ல என்று த்யாக ப்ரும்மம் உபதேசிக்கிறார், மனித உலகத்திற்கு.

கருத்துள்ளுரை

மனித உலகத்தவர்கள் தாங்கள் எவ்விதமான பாபக் ருத்யங்களை உடையவரேனும், கங்கை முதலிய நதிகளில் மூழ்கி க்ஷேத்ராடனம் செய்துவிட்டால், தங்களின் பாபக் ருத்யங்கள் தொலைந்துவிடும் என்றுஎண்ணி, காலத்தையும் தங்களின் அருமையான இந்த மனிதப் பிறவியின் பயனை யும் வீணே கழித்து விடுகிறார்கள் அல்லவா. அவர்களுக்கு உண்மையான ஸ்னானத்தை உரைத்து, மனிதா! இந்த வித மான ஸ்னானத்தினால் உடலில் உள்ள அழுக்கு வேண்டுமா னால் போகலாமே யல்லாமல், உனதுமனத்திலுள்ள பெரும்

நூலேணி விண்ணோற நூற்குப் பருத்திவைப்பார்
போலே கருவிநன்னூற் போதம் பராபரமே

அழுக்காறு, வஞ்சனை, த்ரோகம், நான் என்னும் அகந்தை, காமக்ரோதாதி, வெறி பிடித்த மதம் இவைகள் போகா தப்பா! இதற்கு ராமத்யானமாகிய கங்கையின் ஸ்னானமே வேண்டப்படுவது அப்பா என்று தன்மனத்தை திருத்துவதுபோல் உபதேசித்து, மனித உலகத்திற்கு உபதேசிக்கிறார்.

மற்றும்—இன்னொருவருடைய தனத்தின்மேல், தன்னுடைய மனைவி யல்லாத மற்றொருவருடைய மனைவியின் மேல் ஆசை இல்லாதிருந்தும், மற்றவர்களை தூஷிப்பதை விட்டும், தனது சுகத்திற்காக இதரர்களைத் துன்பப்படுத்தி வாழ்வதை அறவே ஒழித்தும் வாழவேண்டும் மனமே என்று உபதேசிக்கிறார்.

இந்தக் கருத்தைத் தந்யாசி ராகத்தில் பேசியதின் இசைப் பொருத்தம், மனத்தின் இத்யாதி சேஷ்டைகளைக் கண்டு மிகவும் துன்புற்றவராய், உன்னோடு ஒழியாப் பெரும் போராய்ப் போய்விட்டதே என்று மிகவும் வருந்திய உள்ளத்தவராய், அந்த வருத்த நிலைமைப் பண்பு பாவம் செறிய, அதனைக் குறிக்கும் ஒலிகய பாவ உணர்ச்சி ஒன்ற, மிகவும் அன்பாக இனிய முறையில் இப்படி நடவாதே! நான் சொல்வதின்படி நட என்று தன் அருமைக் குழந்தைக்கு நல்லுபதேசம் செய்யும் தாயின் கனிவான உள்ளப் பாங்கில் இருந்து, இயல், இசை, பாவ உணர்ச்சி தொனிக்க, அதற்கான இலக்கணம் அமைந்த ஒலிகளில் ஆக்கப்பெற்ற தந்யாசி ராகத்தில் பேசி உணர்த்துகிறார். சங்கீத ஸாஹித்ய கருத்து, பாவ, இலக்கியச் சக்ரவர்த்தி த்யாகப்ரும்மம்.

தான, கால, கதி, இட, இலக்கண, தத்துவ, விளக்கம்

சின்னஞ் சிறியார்கள் செய்தமணல் சோற்றையொக்கும்
மன்னுங் கலைஞான மார்க்கம் பராபரமே.

உள்ள இந்தக் கருத்தை ஆதி தாளத்தில் இரண்டு கலைச் சவுக்கத்தில் முக்காலிடத்தில் இருந்து ஆரம்பித்துப் பேசிய தத்துவம் என்னவெனில், இந்த விஷயத்தை நன்குபுரிந்து கொண்டு நல்வழிப்பட வேண்டி நிதானமான இரண்டு கலைச் சவுக்கத்தில் நிறுத்தி நன்றாகப் புரியும்படிச்சொல்லி, முக்காலிடமாகிய சிறிது வலிபுறத்திச்சொல்லி, அதனிடம் துஷ்டத்தனத்தைப் போக்கச் சிறிது கடிந்து பேசியும், ஆயினும் இப்படி அந்த மனமானது கெட்டு அலைகின்றதே என்பதற்குப் பரிதாபப்பட்ட தன்மையில் இருந்து, மிகவும் அனுதாபப்பட்ட உள்ளத்தில் நயந்து உரைத்தும், நல்வழிப்படுத்த எடுத்துக்கொண்ட லய இலக்கண பண்பு இலக்கியமாகும்.

ஆத்ம போதம்

(நா. பிச்சுமணி, கி. சுப்ரமணியன், மாடுங்கா)

(323—ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வளவையும் பொறுமையுடன் கேட்ட அவன் சிரித்துக்கொண்டே என் உணர்ச்சி முற்றும் உள்ளபடி உணர்ந்துகொண்டு இவ்விதம் கூறலுற்றான்;

"குழந்தாய், நீ பேசினயாவும் உன் மனத்தின் பரிபாகத்தை நன்கு உணர்த்துகின்றன. அதை எண்ணியே நானும் இங்குவந்தேன். வேதங்களாலும், இனிய கீதங்களாலும், ஸ்ருதி, ஸ்ம்ருதி, உபநிஷத்துக்கள், புராணேதிகளாலும், ஒரு முகமாக ஸ்துதி செய்யப்படுகின்ற ஒரே ஸத்ய வஸ்துவாகிய என்னையே சக்தி, சண்டி, சாமுண்டி,

---

கேட்டதையே சொல்லுங் கிளிபோல நின்னருளின்
நாட்டமின்றி வாய்பேசல் நன்றே பராபரமே.

சாகம்பரி, பைரவி, ஸாவித்ரி, கௌரி, காத்யாயனீ, லளிதா, ராஜேஸ்வரி என்ற பல பெயர்களால் அழைக்கப்படுபவளாக அறிந்துகொள். நித்யாநித்ய பேதம் அறிந்தவர்களும், தபோபலத்தால் தேஜஸ்ஸுடன் கூடியவர்களுமான ஆணவமொழிந்த உண்மைஞானிகளே என் உண்மை ஸ்வரூபத்தை அறிந்துகொள்வர். அன்பனே! யான் விரும்புவது பொன்னையும் பொருளையும் அல்ல; ஆடம்பரங்களையும் அட்டஹாஸங்களையும் அல்ல; வீண் பேச்சும், விதண்டாவாதங்களும் அல்ல; ஆயின், என் உண்மைத் தத்வத்தை அறிந்து, உள்ளன்புடன் வழிபடுவோரே என்னை எளிதில் எய்தும் ஏற்றமுடையவர் என்பதறிவாய். சூரியனாகிய ஒரு ஞான ஒளிச்சுடரின் காரணமாகத்தான் உலகனைத்திற்கும் ப்ரகாசம் கிட்டுவது போலும், சூரியன் இல்லையெனில் எல்லாம் ப்ரகாசமின்றி செயலற்று விடுவதுபோல், அணுவுக்கணுவாயும், மஹத்துக்கு மஹத்தாயும் உள்ள ப்ரஹ்மத்தாலேயே இவ் உலகம் தோன்றி, அதனாலேயே இயங்கி அதனிடமே மறைவது என்ற உண்மையை அறிந்துகொண்டோருக்கே என்னைக் காண்பதெளிதாகும்

தாத! இன்னும் சொல்வேன் கேள்! ஸர்வஸ்வரூபிணியான என்னையே சிவன் என்று சிலர் ஆராதிக்கின்றனர். விஷ்ணுவாகவும், இந்திராதி தேவதைகளாகவும் சிலர் ஸ்துதிக்கின்றனர். ஞானிகளின் வாக்குகளிலே விளங்கும் நானே கொள்ளைக்காரனின் பாதகத்திலும் ப்ரகாசிக்கிறேன். என் உண்மை ஸ்வரூபத்தை உள்ளபடி உணராதவர்களே நான் பொய் என்றும், மாயை என்றும் வீணாய்த் தர்க்கித்து விதண்டா வாதம் செய்வர். கற்பகத் தருவை விட்டு காஞ்சிரங்காயை விரும்புமாபோல் பொய்

கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே.

யையே மெய்யெனக் கொண்டு புலம்புவர். வேண்டாத நரகப் பாதையில் வீழ்ந்து உழலுவர். வீணைச் சேறில் காலிட்டு வெளியேற முடியாது தவிப்பர்.

அன்பனே, கேள்! உண்மையான அன்புகொண்டு எவன் என்னிடம் சரணடைகிறானோ அவனுக்கு நானே அடிமையாகி விடுகிறேன். நான் வேண்டுவது உள்ளன்பு ஒன்றே. கற்ற வித்தையும், அறிவுத் திறனும், வாக் சாமர்த்தியமும் என்னை அணுகும் சாமர்த்திய முடையவை யாகா. என்னிடம் அன்பு கொண்டவன் எல்லாவற்றி லும் என்னைக் காண்கிறான். எல்லோர் ஹ்ருதயத்திலும் வசிக்கும் என்னைத் தெரிந்து கொண்டபின் அவனை இடர் களோ, மோக போகாதிகளோ, கர்மபந்தங்களோ அணு கத் துணிவதில்லை. அவன் பூர்ண ஸ்வதந்த்ர னாகிறான். எல்லையில்லா ஆனந்தக் கடலில் முக்குளித்து உண்மை என்னும் நல் முத்துக்களைக் கண்டெடுக்கிறான். இதுவே பரும்மானந்தம்".

"வத்ஸ, உன் ஹ்ருதயக் குமுறல் கேட்டு, நீ என்னைத் தேடுவதைக் கண்டு, உன் மனத்தின் பரிபக்வத்தைக் கண்டு ஓடோடியும் வந்தேன். இனி நீ அஞ்சவேண்டாம். என் அருகில்வா. இனி உன்னை மரண பயமோ, வேறு ஏதே னும் திங்கோ சிறிதும் அணுகத் துணியா.

நீ மிகவும் கலக்க முற்றிருக்கிறாய். நதியின் தண்ணீர் மிகவும் கலங்கித் தெளிவது போலும், காலையில் ப்ரகாசத் திற்கு முன் இருட்டு மிக அதிகப்படுவது போலும், உன் மனதில் எண்ணற்ற சந்தேகங்கள் போராடுகின்றன. ஆம், அவை நீங்கவேண்டியதும் அவசியம் தான். இதோ பார்! இது என்ஸ்வரூபமே யாகி என்னாலேயே இயங்கு வது. உன் கலக்கங்களின் காரணத்தைத் தயங்காமல்

இல்லாத காரியத்தை இச்சித்துச் சிந்தைவழிச்
செல்லாமை நல்லோர் திறங்காண் பராபரமே.

அதனிடம் கூறி சந்தேகம் நீங்கிப் பேரின்பம் கொள். கலங்காதே" என்று என் முதுகில் லேசாகத் தட்டினுள். நான் தலை குனிந்து நிமிர்ந்தேன். அந்த இடத்தில் சற்று முன் இருந்த ப்ரகாசம் இல்லை. ஆம், அவள் மறைந்து விட்டாள். என் தாய் என்னைத் தனியே விட்டுப் பிரிந்து விட்டாள். தூய்மையே உருக்கொண்ட அவள் ப்ரகாசத்தில், சூர்யன் மறைந்தது; மறைந்து இருந்தது. இப்பொழுது இருள் கவிந்துகொண்டது. என் பேதை உள்ளமோ அடைந்த இன்பத்தை எண்ணி எண்ணி ஏங்கிற்று. அங்கு நடந்த காட்சிகளனைத்தும் என் மனக்கண் முன்னே திரைப் படம் போல் மீண்டும் மீண்டும் தோன்றி என்னை இன்ப லாகிரியில் சிலிர்க்க வைத்தன. ஆம், என் தாயின் அன்பு உருவம் என் அகத்தில் அழியாச் சின்னத்துடன் பதிந்து விட்டது. என் ஆணவ மாய அச்சம் தரும் அரவு, அன்னையின் அன்பு மொழிகளால் அடைந்த அறிவாய கருடன்முன் கொட்டமெல்லாம் அடங்கி செயலற்று நின்றது. மனமோ நடந்த காட்சியை மீண்டும் மீண்டும் நினைந்து பார்த்து, ஒத்திகை நடத்தி இன்புற்ற வண்ணம் இருந்தது.

இதற்குள் சந்திரன் சற்று தைர்ய மடைந்தான் போல், மேகக் கூட்டங்களி லிருந்து வெளிப்பட்டு கிளம்பினுன். ஆளரவ மில்லாதிருக்கும் இரவு வேளையில் தனிமையில் ஆனந்தமாகப் பாலாற்றில் ஜலக்ரீடை செய்து கொண்டிருக்கிருளோ என்று தோன்றியது. அவ்வெழிலை அநுபவித்துக் கொண்டே திரும்பிய யான் கண்டதென்ன ! கைதேர்ந்த சிற்பியின் வல்லமை மிக்க அத்யத்புத கைச்சரக்கு போல், உயிரோவியம் எனத் திகழும் எழில் மிக்க சிலை ஒன்று என்கண் முன்னே நின்றது.

ஏதுவந்தும் ஏதொழிந்தும் என்னதுயான் என்னுர்கள்
போதநிலை கண்ட புலத்தோர் பராபரமே.

தேவியின் ஆக்ஞையால் அனுப்பப்பட்டது என அறிந்தும், என்ன கேட்பது என்பதே தெரியாமல் மௌனமா யிருந்தேன். (தொடரும்)

திருவொற்றியூர். புராணிகர் உயர்திரு.
T. துரைசாமிபிள்ளை அவர்கள் இயற்றிய
கோடைநகர் ஸ்ரீ. பழனியாண்டவர்

பாமாலை

செந்திநகர் மேவுஞ் சிவபாலா சண்முகனே
பந்திபந்தியா வானோர் பதம்பணியும் பாலா
தந்திமுகற்கு இளைய சரவணனே யுனைப்போற்றி
வந்திக்க வினைபோக்கு வடபழனி யாண்டவனே (5)
பற்றுஞ் செந்தமிழிற் பாடுவோர்க்குப் பாவதனை
குற்றங் குணமாகக் கொண்ட குணக்குன்றே
என்றைக்கு மடியவரை யெளிதாளு மெந்தையே
மற்றங்கு மாமருந்தாம் வடபழனி யாண்டவனே (6)
அண்ணலார் மகிழு மருங்குமரா நின்னைத்
திண்ணமா யடைந்தோர்க்குத் தீவினைபோக்குந்தேவா
பண்ணார்ந்த புகழ்மாலை பாடுவோர்க்குப் பார்மீதிற்
வண்ணமாய் வருஞ்சிலா வடபழனி யாண்டவனே (7)
இப்பாரிடை யுனையே வேத்துகின்ற நாயேனை
எப்போதும் என்மனத்தி லியங்கு மிறைவா
தப்பாம லடியவர்க்குத் தாரணியிற் றுளதனை (8)
வைப்பெனக் கொடுக்கும் வடபழனி யாண்டவனே
கஞ்சமல ருடையோனுங் கவினுரு மாயவனுந்
தஞ்சமெனப் போற்றுந் தயைமிகுந்த செவ்வேளே

மாய மயக்கொழிந்நார் மற்றொன்றை நாடுவரோ
நேய அருள்நிலையில் நிற்பார் பராபரமே.

நஞ்சமுதாக் கொண்டவர்தம் நவமணியாஞ் சீர்பாலா
விஞ்சமார் கோடைநகர் வடபழனி யாண்டவனே (9)
விரைசேருங் கடப்பமாலை விண்ணோர் சாற்றிய
அரசேநீ துன்பப்பிறவி யகற்றும் தூயவேளே
புரைசேரும் நெஞ்சப் புலையனுக்கு வென்றென்றும்
வரைமகனாய் வந்துநிற்கும் வட பழனி யாண்டவனே (10)
பண்ணனும் வினையா லலைகின்ற நாயேன்
கண்ணுங் கருத்துங் களிக்கவருங் கற்பகமே
பண்ணுநற் தூயோய் பண்புடையார் பரவ
விண்ணோர் தொழுநிற்கும் வடபழனி யாண்டவனே (11)
பிறவாநெறி தந்தருளும் பித்தன்றன் தத்துவனே
புறவாகிய நின்னடியார் உளங்களிக்கு முத்தமனே
மிறவாவகை யாட்கொள்ளு மீசனருள் புத்திரனே
மறவா வரந்தாரும் வடபழனி யாண்டவனே (12)
பொறுத்தாலும் யான்செய்யுங் குற்றங்கள் பொறுது
ஒறுத்தாலு உன்னைக் கைவிட்டி டேனெனநீ
யறுத்தாலுங் கொன்றிட் டடிமைக்கு கதியாய்
வெறுத்தாலும் வேறிலை வடபழனி யாண்டவனே (13)
கண்டோருங் கேட்டோருங் களிக்கநின்ற செங்கரும்பே
எண்டோள் வீசுமெம் மிறைவன் சீர்க்குமரா
திண்டோள் துலங்கி நிற்குந் தூயவேளே
வண்ணமார் சாலிநகர் வடபழனி யாண்டவனே (14)
ஆறுமுகங் கொண்ட வையாநின் பொன்னடியை
நீறுமுகங் கொண்டுதொழ நிற்கும்நிலை யதனை
ஈறிலா வழுத்தும் இருந்தொண்டருக் காமென்று
மாறிலா விளங்குகின்ற வடபழனி யாண்டவனே (15)

நித்திரையிற் செத்தபிணம் நேருடற் கிச்சைவையாச்
சுத்தர்களே நல்ல துறவோர் பராபரமே.

மங்களவல்லி

ரசபதி

நலம் பல நிறைந்துளது பாண்டிவள நாடு. அந்நாட்டின் திருமுகம் போல் சிறந்துளது திருச்செந்தூர். திருச்செந்தூரிலிருந்து பதினைந்து மைல் தூரத்தில் இருக்கின்றது ஒரு சிற்றூர்.

அப்பதியில், வாழப் பிறந்தவர் மங்கள வல்லியார். அழகிலும் அறிவிலும் உயர்ந்தவர்; அன்பிலும் பணியிலும் வளர்ந்தவர். வழிபாட்டுக் காலங்களில், ஊனெலாம் உருக, நெஞ்சம் நெகிழ, முருகா என்று அவர் பாடும் பாடல்கள், எவர்க்கும் பக்தி பரவசத்தை விளைவிக்கும். ஆறுமுகப் பெருமான் அவதார காலமான வைகாசி விசாகந்தோறும், மங்கள வல்லியாரை, திருச்செந்தூரில் அவர் கணவருடன் காணலாம். கணவர் பெயர் விசாக நம்பி; மனத்திற் குகந்த மணாளர் அவர்.

ஆடித்திங்கள் ஒருநாள் காலை 6 மணி. வழிபாட்டை முடித்த மங்களவல்லியார், இன்னும் தன் கணவர் படுக்கையை விட்டு எழுந்திராமையை அறிந்தனர். எழுப்பலாமா என்பது எண்ணம்; அருகில் சென்றார்; பாதத்தை மிருதுவாகப் பற்றினார்.

என்ன இப்படிச் சுடுகிறதே?

முதுகில், மார்பில், நெற்றியில் கைவைத்தார். கடுமையான காய்ச்சல்; ஸ்மரணையே யில்லை. அச்சம் அதிகரிக்கிறது. அந்நாளில், இந்த விஷ ஜுரம் எங்கும் பரவி, அதற்குப் பலியானவர்கள் பலர். அதை நினைத்து, கண்ணீர் பெருக்குகிறார் தேவியார்.

கவலைப் படாதே அம்மா! திருச்செந்தூரானையே நம்பு; சிகிச்சை செய்வது நம் கடன்; அருள வேண்டுவது அவன் கடன் என்று ஆறுதல் கூறுகிறார்கள் பலர்.

மருத்துவர் கைவிடும் அளவிற்கு, காய்ச்சல் வளர்ந்தது. எதிர் வீட்டில் ஒருவர்; பக்கத்து வீட்டில் இருவர்; தெருக்கோடியில் நால்வர்; இதே காய்ச்சலால் இறந்தனர்.

தேடினேன் திக்கனைத்துந் தெண்டனிட்டேன் சிந்தைநைந்து
வாடினேன் என்மயக்கம் மாற்றாய் பராபரமே.

நல்லவர் விசாக நம்பி; இனி அவர் தேறமாட்டார் என்று, பெண்கள் சிலர் தமக்குள் பேசிக்கொள்ளும் செய்தியும், செவியில் விழுகிறது

என்னமோ அம்மா, உன் மாங்கல்ய பலந்தான் துணை செய்ய வேண்டும் என்ற மொழிகள், இரண்டொரு பாட்டிகளின் கண்ணீரோடு கலந்து வந்தன.

இவைகளால், எந்த நேரத்தில் என்ன நேருமோ என்று வயிறு குழம்பும் மங்கள வல்லியார், வீருவேசங் கொண்டவர் போல் எழுந்தார், பூஜை யறையுள் புகுந்தார்.

திருச்செந்தில் ஆண்டவன் திருவுருவப்படம், கம்பீரமாகக் காட்சிதருகிறது.

என் அப்பனே! அரம்பையர் மங்கலநாண் காக்க ஆலமுண்டார் சிவபிரான்; மகிஷனை மாய்த்து, தையலர்தம் தாலி காத்தாள் தற்பரை; கயமுகனைக் கடிந்து, காரிகையர் கழுத்தணி காத்தார் கணபதியார்; இரணிய ராவணாதியரை விழ்த்தி, மங்கையர்க்கு வாழ்வு தந்தார் திருமால். இவைகள் அனைத்தும் ஒரே அண்ட வரலாறுகள்.

அகில அண்ட மாங்கல்யம் வாழ, கண்ணிற்கு மை சேர, கைக்கு வளை விலக்க, மஞ்சளும் குங்குமமும் மருக்கொழுந்தும் தாங்கிப் பெண்ணுலகம் பெருமை பெற, ஆறு அருள் பொறியாய் வந்தாய்; விண்ணெலாம் வியாபித்தாய்; காற்றனைத்திலும் கலந்தாய்; நெருப்பிலே நின்றாய்; நீரிலே தோய்ந்தாய்; மண்ணிலே மலிந்தாய்; கருத்தில் புகுந்து கதி காட்டுகின்றாய்; ஆறுதல் தருகிற ஆறுமுக அத்தா! பிறவிக் கடலுக்கெதிரான அருட்கடலே! கரையேற்றுதலுக்கு அறிகுறியாக கடற்கரையில் நின்றாய்! எம்பெருமானே! உத்தம என் பர்த்தாவிற்கு உயிர்ப் பிச்சை தா! ஏழை பங்கி லிருந்தவனே! பேதை யிவள கழுத்தில் மாங்கல்யம் பிரகாசிக்க அருள் செய்! வைகாசி விசாகத்தன்று செந்தில் சந்நதிக்கு வருகின்றேன்; மாங்கல்யத்தைக் காணிக்கையாக மலரடியில் சமர்ப்பிக்கிறேன் என்று, கதறிக் கண்ணீர் பெருக்கிக் கை கூப்பித் தொழுதார்.

மடிமையெனும் ஒன்றை மறுந்தன்றோ என்னை
அடிமைகொளல் வேண்டும் அரசே பராபரமே.

திடீரென்று உதித்த சிந்தனைப்படி, கணவர் கரத்தில் மஞ்சள் காப்பைக் கட்டினார். மந்திரமும் மருந்துமாகித் தீரா நோய் தீர்த்தருளும் இலை விபூதியை, அவ்வமயம் அன்பர்கள் கொணர்ந்து அளித்தனர். அதை, பயபக்தியுடன், ஊட்டும் கஞ்சியில் கலந்து கணவனுக்கு உண்பித்தார்.

என்ன வியப்பு! மறுநாளே காய்ச்சல், சிறிது மட்டுப் பட்டது. அதிசயிக்கும் விதமாக, ஐந்தாறு நாட்களில் உடல் குணப் பட்டது.

அருள் குணாளா! வள்ளி மணாளா!! உனது மகிமையே மகிமை என்று ஆனந்தக் கண்ணீர் பெருக்குகிறார் மங்கள வல்லியார்.

மற்றும் ஐந்து நாட்களுள் போன பலம் கணவனுடலில் புகுந்தது. மின்னியது மேனி. நயமான வாழ்க்கை பழையபடி நடந்தது. மனையறத்தில் விளைந்தது மகிழ்ச்சி. பழைய அச்சம் பறந்தது. இடையில் ஒன்பது மாதம் ஓடி மறைந்தது.

மறதி மனித சுபாவம்; வாழ்க்கைச் சூழ் நிலை பல; அதனால், பிரார்த்தனை செய்து கொண்டதையும் மறந்துவிட்டது மனம்.

வைகாசி பிறந்தது. நாளை விசாக தினம். இன்றிரவே புறப்படுவம் என்று எண்ணினர் தம்பதிகள். இரவெலாம் நடந்தனர். வைகறையில் செந்தில் பதியைச் சேர்ந்தனர்.

வதனாரம்ப தீர்த்தம், நாழிக் கிணறு முதலியவற்றில் நீராடினர். விபூதி யணிந்து விரதம் ஏற்றனர். சந்நிதி சார்ந்தனர். பகலெலாம் பக்தர்க் கெளியனைப் பாடிப் பணிந்தனர். அன்றிரவு முழுதும் துதி, ஜெபம், தியானத்தில் கழித்தனர். மறுநாள் காலை நீராடி, செவ்வேளைச் சேவித்து, ஊர் செல்ல திட்டமிட்டனர்.

கடற்கரை எய்தினர். ஆரவார அலைகள் அதிகமில்லை. நிம்மதியாக நீராடினர். திடீரென்று ஒரு பெரிய அலை எழுந்தது. வேகமாக மோதியது.

ஆடிஓய் பம்பரம்போல் ஆசையுடன் எங்கும் உனைத்
தேடிஎய் க்கின்றேன்என் செய்வேன் பராபரமே.

அதனால், விழுந்து உருண்டனர் மங்கள வல்லியார். விசாக நம்பி, தட்டுக் கெட்டுத் தடுமாறி வந்து, மங்கள வல்லியாரைப் பிடித்துக் கொண்டார். சிரிப்பொடு முடிந்தது இச் சிறுசம்பவம்.

டாம்! டாம் என்று முழங்கியது கோயில் மணி. அவசர அவசரமாக இருவரும் ஆலயத்தை யடைந்தனர்.

நலஞ் சிறந்த ஆராதனை நடைபெறுகிறது. முருகா! குமரா!! குகா!!! எனும் அன்பர்களின் பேரொலி, கல் மனத்தையும் கரைக்கிறது.

எவர்க்கும் கிடைத்தது இலை விபூதி. கைக்கு வந்த விபூதியை, மங்கள வல்லியார் பயபக்தியொடு நெற்றிக்கு இட்டார். தாலியிலும் தடவ, கழுத்தில் சென்றது கை.

ஆஹா! என்ன இது? எங்கே மாங்கல்யம்? திடுக்கிட்டது மனம். ஐயோ எங்கே என் தாலி என்று உடல் நடுங்க, உள்ளம் அடிக்க கதறி அழுகிறார்.

விஷயத்தை உணர்ந்தார் விசாக நம்பி.

கவலைப் படாதே! அலை கடல் செய்த ஆடல் இது என்று ஆறுதல் கூறினார். உடனே கடையில் விலைக்கு வாங்கிய கயிறு ஒன்றில், மஞ்சள் கோத்து கழுத்தில் தரித்தார்.

அதன் பின்னும், மாலை மாலையாய்க் கண்ணீர் பெருகுகிறது.

என்ன அபசகுனம்? செந்திலாண்டவனே! யான் செய்த பிழை யாது? ஒன்றுமே புரியவில்லையே! என்னமோ, என்னைக் காப்பதுன் கடன் என்று கைகுவித்துக் கதறினார்.

மனைவியைத் தேற்றி ஊர்க்கு அழைத்துச் சென்ற விசாக நம்பி, பொன்னால் ஒரு தாலி செய்து புனைந்தார். நாளேற ஏற, இந்த சம்பவ சிந்தனை, சிறுகச் சிறுக மறந்த செய்தி யாயது.

அடுத்த ஆண்டு விசாக நாள் பிறந்தது. மங்கள வல்லியார், தம் கணவருடன் திருச்செந்தில் சேர்ந்துளர்.

முறைப்படி யிருவரும் நீராட முயன்றனர். சென்ற ஆண்டின் சம்பவம் சிந்தனையில் நின்றது. அதற்காக நீராடாதிருக்க முடியுமா?

ஆனந்த மானதின்னை அன்றியொன்றை உன்னுத
மோனந் தமியேற்கு முத்தி பராபரமே.

கடல் நீராடும் சமயம், சதிபதிகள், தாலியில் கண்ணும் கருத்துமா யிருந்தனர். அப்படி யிருந்தும், சிறிது ஏமாறும் சமயத்தில் மோதிய பேரலை, கழுத்திலிருந்த தாலியைக் கவர்ந்தது.

மங்கள வல்லியார்க்கு உரை குழறுகிறது; உடல் நடுங்கு கிறது. விதி என்னோடு விளையாடுகிறது என்று விம்மி விம்மி யழலானார். மனைவியின் அழுகை கண்டு, விசாக நம்பி மனம் உருகினார்.

என்ன இது! இதற்கெல்லாமா இப்படி வருந்துவது? கடல் நீராடுநர்க்கு இது சகஜம்; வேறு செய்து கொள்ளலாம் என்று தேற்றினார். பழையபடி மஞ்சள் கோர்த்த கயிறுதான். ஆண்டவனைச் சேவித்து ஊர் திரும்பியதும், கனகத்தில் வேறு ஒரு தாலி செய்து கழுத்தில் கட்டினார்.

மங்கள வல்லியார்க்கு இச்சம்பவம் இனி மறக்க முடிவதா யில்லை. அலை மோதலாம்; நான் விழலாம். கழன்ற தாலி மிதப்பதுகூட இல்லையே; கண்ணிற்குத் தோன்றாதபடி உடனே கரந்து விடுகின்றதே! எதிர் காலத்தின் விளைவு யாதோ? கஜவல்லி வனவல்லி மணாளன்தான் நம்மைக் காக்க வேணும் என்று மனங் கசிந்திருந்தார்.

மாதம் பல மறைந்தது. அடுத்த வைகாசி வந்தது. விசாகத்திற்கு செயந்திபுரம் செல்வதா வேண்டாமா என்ற ஐயம் மனத்தில் எழுந்தது. அன்புடைய கணவர் பயணத்தை ஆரம்பித்து விட்டார், மறுக்கவும் மனமின்றி, புறப்பட்டார் மங்கள வல்லியார்.

செந்திலம் பதி சேர்ந்தனர். கடற்கரை எய்தினர்.

காதா! நீங்கள் மட்டும் கடலில் நீராடுங்கள். நாழிக் கிணற்றில் முழுகுகின்றேன் நான்

ஏன் பழைய பயமா! சீசீ! இதற்கெல்லாம் சளைக்கலாமா? இது எவ்வளவு புனித ஸ்நானம்!

ஏதுக்கும் உன்னைவிட இல்லையென்றால் என்கருத்தைச்
சோதிக்க வேண்டாம் நான் சொன்னேன் பராபரமே.

இப்படி வா! என் கையைப் பிடித்துக் கொள்; அதிக ஆழம் போக வேண்டாம் என்று, மங்கள வல்லியார் கையைப் பிடித்துக் கொண்டு விசாக நம்பி கடல் நீராடுகிறார்.

சோதனைக்கும் ஒரு எல்லை வேண்டாமா? சிற்றலையொன்று திடீரென்று பேரலையாகி மோதியது. விழுந்து உருண்டு எழுந்தனர் இருவரும்.

மங்கள வல்லியார் உடல் ஆடுகிறது.

என்ன செய்தி என்று அலறினார் கணவர்.

ஐயோ தாலி!!!

ஓவென்று கதறிய மங்கள வல்லியார், எத்தனை எச்சரிக்கை யிருந்தும் என்ன பயன்? வதனாரம்பம் என் மாங்கல்யத்தை வலிந்து கொள்கிறதே! யாது செய்வேன்! ஒன்றும் தோன்றவில்லையே என்றபடி, சந்நிதி நோக்கி ஓடுகிறார்.

உன்மத்தமே பிடித்து விட்டதோ? என்ன இப்படி ஓடுகிறாளே என்று, தாமும் விரைந்து தொடர்ந்தார் விசாக நம்பி.

அருளின் வாழ்வே! அறுமுக அமலா! உன் சோதனையோ இது? முருகா! முருகா!! முருகா!!! மாங்கல்யம் மூன்று முறை தவறியதே! விபரீதம் யாது விளையுமோ விளங்கவில்லையே! உய்வேனா இனி உய்வேனா யான் உமையாள் மகனாய் ஆள்வானே என்று, ஆறாகக் கண்ணீர் பெருக அழுது கதறுகிறார்.

கதறலும் முறையீடும், அன்பர்களின் கவனத்தைக் கவர்ந்தது. திசையறியா மீகான் போல் திக்பிரமை எய்திய விசாக நம்பி, திருச்செந்தூரானைத் தொழுகிறார். செய்தியறிந்த பக்தர்கள் சித்தம் கலங்கினர்.

ஹா! ஹா என்று துள்ளிக் குதிக்கிறார் அர்ச்சகர். அச்சம் மிகுந்து அனைவரும் ஆவேசகரை நோக்கினர்.

நகைக்கிறார்; பற்களைக் கடிக்கிறார். திருமேனியை முறித்துக் கொள்கிறார். அது கண்டு மெய்ம்மறந்த அன்பர்கள், திருச்செந்தூரானுக்கு அரோஹரா என்று ஆரவாரிக்கின்றனர்.

கல்லெறியப் பாசி கலைந்துநன்னீர் காணும்நல்லோர்
சொல்லுணரின் ஞானம்வந்து தோன்றும் பராபரமே.

மங்கள வல்லியார்க்கு மயிர்க் கூச்செட்டது.

என் அப்பனே! பாவி செய்த தவறு யாது பகராயா? மும்முறையும் மோசம் போனேன் முருகேசா என்று கால்கள் தள்ளாட, உள்ளம் ஊசலாட, பெருமூச்சு வாங்க, கூவி யழுது குமுறு கின்றார்.

ஹூம்.........ஹூம்......தாலி காணிக்கை தருவேனென் றனை!.........தந்தாயா! மனம் எண்ணியது நிறைவேறியதும், மறந்தே போயினை! ஹூம்...ஹூம்...ஹூம்! வாய் வழி வரும் வாய்மை தவறினால், உள்ளத்தில் ஒளி உதயமாகாது உண்மை ஒளியிலதேல், மெய்ப்பொருளாம் என் தரிசனம் மேவாது; இந்நிலை எமது அன்பர்க்கு நேர யாம் பொறுக்க மாட்டேம்! அதற்கென்றே கழுத்திலிருந்த தாலியை மும்முறையும் கவர்ந்தேம்! மூன்றாண்டு கவலையின் மூலம், உனக்களித்த தண்டனை முடிந்தது. ஹாம் ஹீம் ஹூம்! கடலில் மூழ்கு! வித்தகப் பயன் விளையும் என்று கீறு தந்து மலையேறியது ஆவேசம்.

உள்ள பிழை உணர்த்தப் பெற்ற மங்கள வல்லியார்க்கு, உடல் குலுங்கியது! உள்ளம் நடுங்கியது.

நீலமயில் வாகனு! உனது மறக்கருணையை என்றும் இனி மறவேன்! ஆறிரண்டு தோளா! ஓரிரண்டு தாளா! அருள் பொழியும் அறுமுகவா என்று இரைந்து கூவி, கடல் நோக்கி ஓடினார். கணவரும் விரைந்தார். தொண்டர்களும் பாய்ந்தோடித் தொடர்ந்தனர்.

கருணாகரக் கடவுளே! ஒரு முழுக்கு; கார்த்திகேயா! மற்றொரு முழுக்கு; திருச்செந்தூர்த் தேவா! இது மூன்றும் முழுக்கில் கொடுத்த குரல்.

என்ன அற்புதம்! ஒவ்வொரு முழுக்கிற்கும் ஒன்றாக, மூன்று முழுக்கிற்கு மூன்று தாலி, கந்தன் அருளால் கழுத்திலேறியது.

மனக்கவலை மாய்ந்தது. பெயர்க்கேற்பப் பிரகாசிக்கிறது, அந்தப் பெண் பெருமாளின் திருமுகம். விசாக நம்பி, விமலன்

நானென தன்மையென்று நாடாமல் நாடஇன்ப
வானுகி நின்றனைநீ வாழி பராபரமே.

அருளை நினைந்து வியந்தார். அன்பர்கள் ஆனந்தக் கண்ணீர் பெருக்கி, ஹர ஹர கோஷம் எழுப்பினர்.

அன்பு வெள்ளம் இழுத்துச் செல்ல, அருட்கடலான ஆறு மூகன் சந்நிதியை, மங்களவல்லியார் அடைந்தார். யாவரும் தொடர்ந்தனர்.

எந்தாய்! மயிலேறும் கந்தா! வேலேந்தும் சேந்தா! சாந்த மூர்த்தமே! சண்முக தெய்வமே! அறிவிலா எனது அப சாரம் திருவுளத்தில் கொள்ளாமல், இரக்கம் காட்டி அருள் பாலித்த உனது பெருங் கருணை நீடூழி வாழ்வதாக என்று போற்றும் அம்மையார் மொழிகள், எவர்க்கும் புளகாங்கிதமாக இருந்தது.

புலவர் குலப் பூவை; குறவர் குலக் குயில் எனும் இரு தங்கக் கட்டிகள் நடுவிருந்த சிங்கக் குட்டியே! நீ திருச்செந் தூரி லினிதிருக்க, இனி எங்கள் பசுபோதம் உய்யுமோதான்; மறவாதுனை யாங்கள் என்றும் வழிபட அருள் என்று சந்நதியில் விழுந்து வணங்குகிறார் விசாக நம்பி.

முதல் அகப்பட்ட மாங்கல்யம், முன் சொன்னபடி காணிக்கை; அடுத்து அகப்பட்ட தாலி, அபராத காணிக்கை என்று, மங்கள வல்லியார் சண்முகப் பரமன் சந்நிதியில் சமர்ப் பித்தனர். அதன் பின் அகப்பட்ட மாங்கல்யம், கந்தப்பிரான் கருணையை நினைவுறுத்த கழுத்தில் மின்னியிருந்தது. அதுதான் சரி என்று அகமகிழ்ந்தார் விசாக நம்பி.

ததாஸ்து என்றனர் பக்த கோடிகள்.

நம்புவோர்க்கு உண்மையன்; நாத்திகத்தில் வெம்பு வோர்க்கு சூனியன் என விளங்குகிறது விமலன் இயல். அமுதம் மகவிற்கு அமுதூட்டி, காலம் நோக்கிக் கைப்பு மருந்தும் ஊட் டும் அன்னைபோல், வினையளவான அறிவளித்து, எவர்க்கும் உதவுகின்றான் வேலிறைவன்.

மங்கள வல்லியார், வைகாசி விசாகத்தை என்றும் மறந் திலர். வாக்கின் தூய்மை, நாம ஜெபத்தால் வளர்ந்தது. தியா

அகத்தூ டணுவணு வாய் அண்டமெல்லாந் தானுய்
மகத்தாகி நின்றனை நீ வாழி பராபரமே.

னத்தால், உண்மையில் உள்ளம் தோய்ந்தது. வாய்மை உண்மை யிரண்டும் வளர்ந்ததும், மெய்ப் பொருள் அனுபவம் விளைந்தது. வைராக்ய பரம பக்தி வளர்ந்தது. இங்கிலே பிறந்தவர்க்கு, பார்க்கும் இடமெல்லாம் திருச்செந்தூர்தானே!

ஒரு வைகாசி விசாகத்தன்று கணவருடன் திருச்செந்திலை யடைந்த மங்கள வல்லியார், செந்திலாதிபனைச் சேவித்தார். இலை விபூதியைப் பெற்றார். தாலி தந்த தரும துரையே என்று போற்றிப் புகழ்ந்தார். கோயில் வாயிலைக் கடந்தார். குமர குமர குமரேசா என்று கூறிக் குதூகலித்தார். திடீரென்று திருச்செந்தூரானுக்கு ஜே என்று வீறிட்டுக் கூவி, கைகளைக் கூப்பியபடி கோயில் நோக்கி வீழ்ந்தார்.

அதே சமயம், விமல விமல விமலவோ என்று வீறிட்டுக் கூவியபடி விசாக நம்பியும் வீழ்ந்தார்.

வீழ்ந்தவர் எழுந்திலர். நெடிது நேரம் பொறுத்த பின், அன்பர்கள் அவர்களை யணுகினர்.

இருவர் உயிரும் செந்திலாண்டவன் திருவடி சேர்ந்து இன்பமெய்தின என்பதை யறிந்தனர். இருவர் மேனிகளிலும் வீசியது தெய்வ மணம்.

முருகாபதி பிணிபரறிடின் முதலாமென தாலி
தருவேனெனு நிறைமங்கலை தவருயின னாக
முருகார்கடல் முவ்வாண்டினு முத்தாலிகொண் டோதி
வரனுலவி யறனுர்துரை மறவேலெனை மறவேல்.

என்றிவ் வரலாற்றை யின்றும் கூறுகிறது தமிழகம்!

கோயில்கள்

(ஸ்ரீ வத்ஸன்)

தெருக்களில் மாஞ்செடி முளைக்க வைத்தல், கூடையில் ஓர் மகவை அடைத்து வைத்துப் பிறகு அதன்

சொல்லும் பொருளுந் தொடரா அருள்நிறைவில்
செல்லும் படிக்கருள்நீ செய்தாய் பராபரமே.

பெயரிட்டு அழைக்கும் போது தெருவின் ஓர் புறத்தி லிருந்து வருதல், ஓர் துணியைக் கிழித்துத் தீ வைத்துப் பிறகு அதையே சேதமற்ற துணியாகக் காட்டல், இவை போன்ற வித்தைகளைப் பலர் கண்டிருத்தல் கூடும். மற்றும் சில தேர்ந்த வித்தைக் காரர்கள் இன்னும் அரிய அதாவது ஆதாரமின்றிப் பறத்தல், ஒருருவை இரு துண்டாக்கல் முதலிய வித்தைகள் செய்வதையும் பார்த் திருக்கக் கூடும். பார்ப்பவர்கள் யாவரும் விழிப்புடன் நுணுக்கமாகக் கவனித்திருக்கும் போது, சிறிது நேரத்திற் குள் இச்சால வித்தைகள் நிகழ்வதை அவ்வூனக் கண்க ளால் அறிய முடியவில்லை. ஏன்? இத்தகைய நிகழ்ச்சிகள் கண் மறைப்பு வித்தைகள் என்றும், கைச்சுருக்க வித்தை கள் என்றும் கூறப்படும். கண் மறைப்பு வித்தைகளில் சிலவற்றிற்கு கருமானம் என்னும் ஓர் மையும் தேவை யுண்டு. இப்படிச் செய்யும் வித்தைகள் கருவின் வித்தைகள் அதாவது Black Magic என்று கூறப்படுகிறது.

இதற்கு மாறாக உண்மையிலேயே பலர் அறிய மறைதல், பலர் அறிய காற்றில்லா இடத்தில் வெகு நேரம் தங்கல் முதலியவைகளும் உண்டு. அவைகள் பொதுவாக White Magic என்றும், சித்திகள் என்றும் நூல்கள் கூறும்.

இச்சித்திகளை உயர்ந்த முறையில், தெய்வீக முறையில் அடையும் மார்க்கங்களே அஷ்டாங்க யோகம் (எட்டுவித யோகம்) எனப்படும்.

இவ்வெட்டும் பல பிரிவுகள் கொண்டவை. அவை யாவன: இயமம் 10 வகை, நியமம் 10, ஆசனம் 9;

தேடுந் திரவியமுஞ் சேர்ந்தமணிப் பெட்டகமும்
கூட வருந்துணையோ கூருய் பராபரமே.

பிராணுயாமம் 5, பிரத்தியாகாரம் 6, தாரணை 6, தியானம் 10, சமாதி 5 வகைகள்.

இங்கு சமாதியை மட்டில் கவனிப்போம். இஃது முறையே தத்துவலய சமாதி, சவிகற்ப சமாதி, நிர்விகற்ப சமாதி, சஞ்சார சமாதி, ஆரூட சமாதி என ஐந்து திறப்பட்டவை. சுருங்கச் சொல்லின் சமாதி என்பது, உடலின்கண் கூறப்படும் தத்துவங்கள் யாவும் **சேட்டை யற்று, பல கருத்துக்கள் அழிந்து ஒன்றே யாகி, உள்ளறையில் காற்றில்லா விளக்குப் போல அசைவற்று அலேச்சலற்று, தேக மநை மறந்து, மனத்தில் ஒடுங்கி நிற்றல் என்று கூறுகிருர் அகத்தியர்.**

(அபரி பூரணம் 1200)

இவ்வாறு மனத்தை ஒருமைபடச் செய்து உண்முக மாக்கி உடம்பிலுள்ள உத்தமனை யறிந்து, அவனுடன் ஐக்கிய மடைந்திருக்கும் நிலேயே சமாதி நிலே என்றும், இந்நிலேயில் பழக்கத்துக்குத் தக்கபடி, பல மணி நேரங்கள் நாட்கள், மாதங்கள், பல வருடங்கள்கூட இருக்கலாம் என்றும், அப்படி யிருந்த அநேக முனிகள் ரிஷிகள் வரலாறுகளும் நூல்களில் காணப்படுகின்றன.

இங்கு ஓர் குறிப்பு: இரண்டு ஆண்டுகளுக்கு முன் சென்னே மூர்மார்க்கட்டின் பக்கல் ஓர் வட இந்திய தவசி பன்னிரண்டு மணி நேரம் சமாதியில் இருந்து வந்ததை சில நேயர்கள் கண்டிருக்கக் கூடும், அல்லது செய்தித் தாள்களில் வந்ததைப் படித்தாவது இருத்தல் கூடும். மேலே கண்ட தவசி, மந்திரி, டாக்டர்கள், இஞ்சினியர்கள் முன்னிலேயில் சமாதியில்—ஓர் காற்றுப் புகாது தயாரிக்கப்

உள்ளபொருள் ஆவி உடல்மூன்றும் அன்றேநான்
கொள்ளே கொண்ட நீயென் குறைதீர் பராபரமே.

பட்ட ஓர் அறையில் இறங்கி, இரவு முழுதும் இருந்து காலை 8 மணிக்கு பலர் முன்னிலையில் வெளியில் கொணரப் பட்டார். வெளியில் வரும்போது உடம்பு தண்ணீர் போல் குளிர்ந்து இருந்தது. வைத்தியர்கள் சோதனை செய்தனர். பிறகு அரை மணி கழித்து அத் தவசி சுய நிலையை யடைந்தார். அப்போது அவர் தமது சுவல்ப பழக்கத்தினால் பன்னிரண்டு மணி நேரம் சமாதியில் இருக்க முடிந்தது என்றும், அதீத யோகிகள் பல வருஷங்கள் இருத்தல் கூடும் என்றும் சொன்னது நேயர் கள் கேட்டிருக்கலாம். இதிலிருந்து சமாதியில் இருத்தல், பிறகு வெளி வருதல் என்பது ஓர் பிரத்யக்ஷ காக்ஷி என்றும் யாவரும் நம்பக் கூடியது என்றும் ஏற்பட்டது.

இப்படிப் பல வருடங்கள் சமாதியில் இருந்து பிறகு வெளி வந்தவர்கள் சரிதங்களை, சித்தர்கள் நூல்களில் வெகுவாகக் காணலாம்.

காய கற்பாதிகள் கொண்டு தவவலிமை பெற்ற நாதாக்கள், சித்தர்கள் தமது சீடர்கள் முன்னிலையில் சமாதி யில் இறங்குவார்கள். இறங்கும்போது சீடர்களுக்கு புத்திகள் பல சொல்லி, தாம் வெளி வரும் காலத்தையும் குறிப்ப துண்டு. அப்போது நிகழக்கூடிய சில அதிசயங்களையும் அவர்கள் கூறுவதுண்டு. அவர்களுள் சிலவற்றை இங்கு குறிப்பிடுவோம்.

பார்க்கையிலே குருடனவன் கண் திறப்பான், பாங்கான செவிடனுக்கு சத்தம் கேட்கும், தீர்க்கமுடன் ஊமையனும் வார்த்தை சொல்வான், திறமான சப்பாணி நடப்பான் பாரு.

தாரா அருளையெல்லாந் தந்தெனையும் நின்னருளின்
வாராயோ என்றனை நீ வாழி பராபரமே.

ஆர்க்கவே போகர்க்குச் சொன்ன வாக்கு, அப்பனே உலகுதனில் நடக்குந்தானே.

தானென அதிசயங்கள் மிக நடக்கும், தாக்கான சமாதி விட்டு வருகுட்போது, பானென பாரையது வெடிக்கும் பாரு, பளிங்கான சொருபமென்ற சோதிகாணும், தேவி மனோன்மணியாள் கடாட்சத்தாலே, வேனென சமாதிவிட்டு வெளியில் யாரும் விருப்பமுடன் வருவேனென் றியம்பினரே.

மேலே கண்டவாறு கடுவெளி சித்தர் சமாதிக்குப் போகுமுன் கூறினரென்று நூல்கள் கூறுகின்றன.

சித்தான ஜெயமுனி ரிஷியார் தாமும் சிறப்புடனே வையகத்தைத் தான் மறந்து, முத்தான சமாதிக்குப் போறேனப்பா, மூதுலகில் மறுபடி வருவதில்லை, பத்தான சீடவர்க்கமான பேரை, பாரைகொண்டு எந்தனையும் மூட வேண்டும், சுத்தமுடன் சதாகாலம் பூசை வர்க்கம் சுடரொளியாந் தீபமதை வைக்க நன்றே.

மேலே கண்டவாறு ஜெயமுனி சமாதிக்குப் போகுமுன் கூறியுள்ளார்.

தானென யெந்தனிட போகநாதா, தண்மையுள்ள கண்மணியே யின்னஞ் சொல்வேன்; தேனென தெள்ளமிர்த சிவராஜ யோகா தெளிவான சீனபதிகக் ரகுள்ள தீரா, பானென மனோன்மணிக் குகந்த பாலா, பாருலகில் சித்தர் மெச்சும் பண்புடைய தேகா, மானென வையகத்தில் எனக்குகந்த சீஷா, மாட்சியுடன் நானுரைப் பேன் யின்ன மிகக் கேளே.

நவிலவே போகரென்ற யெந்தனைத்தான், நாதாந்தச் சித்தொளிவுதானழைத்துச் சொன்ன நீதி, புகழுடனே யானுரைப் பேன், கவிலமதாய் காசியினி யிலாசை விட்டுக் கர்தரிட பதி தேடி போறேனப்பா, தவிலமுடன் யெப்போதும் புத்திமானாய் தரணியில் யெந்தன் பேர் கொள்ளென்றுரே.

கொள்ளவே சன்மார்க்க புத்தி வேண்டும், குவலயத்தில் மதிப்புள்ள சீடனை, எள்ளளவும் பிசகின்றி நடத்து வண்ணம்

ஆசையுன்மீ தல்லால் அருளறிய வேறுமொன்றில்
பாசம்வையேன் நின்கருணைப் பாங்காற் பராபரமே.

யெழிலான சிஷனுக் குகந்தவானாய், கள்ளமின்றி பொய் சூது கபடு தந்திரங் காசினியி லிற்றதொரு பூமானாக, வள்ளவே யாவருக்கு மன்பனாக மேதினியி லிருப்பதுவே புத்தியாமே.

புத்தியுடன் றனிருந்து சாயுச்சியகாலம் புகழாக தரணியில் கீர்த்தி பெற்று, சத்தியத்துக் கோர் நாளுந் தவறில்லாமல் சட்ட முடன் மேதினியி லிருந்துகொண்டு, நித்தியமுஞ் சதாகாலம் குருவைப் போற்றி நீதியுடன் நிட்டையிலே தானிருந்து, முக்தியுடன் நற்பதவி பெறவே வேண்டு, மூதுலகி லிருக்கவென வரைந்திட்டாரே.

அறையவே காலாங்கிதா னுரைத்த அன்பான வார்த்தைக்கு வடியென்றனும், குறைகளுந்தான் நேராம லடியேன்றனும் குற்றமற நடப்பேன் நானென்று சொல்லி, திறையகற்றி யவர்பதம் தொழுது போற்றி சிந்தனையாம் மெய் மறந்து நமஸ்கரித்து, முறையோடு சோடச வுபசாரத்தோடு முடிவணங்கி தொழுதிட்டேனே.

நாதரா மென்மீதில் பட்சம் வைத்துக் கவனமுடனடப்பதற்கு மிகவாய்க்கூறி, பாலமுடன் நேசர்கள் மிகக் கொள்ளாதே பாரினிலே கர்மிகளும் பாவியுண்டு, கோலமுடன் நல்லவர் போ லிருப்பா ரப்பா, பொங்கமுட னவர்களைத்தான் நம்ப வேண்டாம், சீலமுடன் யாவருக்கும் நண்பனாக சிறப்புடனே வாழ்க வென்று வரந்தந்தாரே.

வரமுடனே தான் கொடுத்துக் கலங்கி நாதர், வண்மை யுடன் சமாதிக்குப் போக வென்று, கரமெடுத்துக் கண் தனில் ஒத்திக்கொண்டு கருத்துடனே காலங்கி நாதர் தாமும், சிரங்குனிந்து கண்ணீருந்தான் கலங்கி சிறப்புடனே யெந்தனுக்குப் புத்திகூறி, மரம் போலத் தானிருந்து காலங்கிநாதர் மயக்கமுடன் விடைகொ டுத்தாரெனக் குத்தானே.

ஆதியந்த நீருருவாய் ஆண்டதல்லால் நின்னையன்றிப் போதனையும் உண்டோ புகலாய் பராபரமே.

இவ்வாக்கியங்களை காலாங்கி நாதரால் அவரது முக்கிய சீடராகிய போகநாதருக்கு கூறப்பட்டவை என்று போகர் சொல்லுகிறார்.

மிகவும் கருணை ததும்பும் இவ் வாக்கியங்களை நூலில் உள்ள வண்ணமே இங்கு கொடுத்துள்ளோம்.

இதிலிருந்து ரிஷிகளும் முனிகளும் சிஷ்யர்கள் முன்னிலையில் சமாதியில் இறங்கும்போது அவர்கட்கு புத்திமதிகள் கூறி, தான் சமாதியில் இருக்குங் காலமும் வெளி வரும் காலமும் குறிப்பிடுவதுடன், வெளி வரும் போது ஏற்படும் அதிசயங்களையும் முன் கூட்டியே அறிவிப்பது உண்டு என்று தெரிகிறது. இப்படி அநேக ரிஷிகள் கூறியுள்ளார்கள். அவைகளை யெல்லாம் நேயர்கள் கவனிக்க வேண்டுகிறோம்.

தவிர ஒரே ரிஷி, ஒரு முறை, இரு முறை, மும்முறை யும் சமாதியில் இறங்கி வெளி வருவதுண்டு. ஒவ்வொரு முறையும் பல வருடங்கள் தங்கிப் பிறகு வெளி வருவார் கள். அவர்கள் சமாதியில் இருக்கும் வரையில் அந்த சமாதி யிடத்திற்கு மேல் ஓர் லிங்கத்தை வைத்து அதற்கு பூஜை முதலியவைகளை நடத்தி வருதல் வழக்கம். மேலே கண்டபடி செய்யுமாறு ஜெய முனி ரிஷிகள் சமாதிக்குப் போகு முன் சீடர்கட்கு கூறியுள்ளதைக் கவனிக்கவும். (2)

இவ்வண்ணம் தமிழ் நாட்டில் ரிஷி முனிவர்கள் சமாதியில் தங்கிய இடங்களெல்லாம் காலக்கிரமத்தில் வழிபடும் தலங்களாயின. அங்கெல்லாம் சிவலிங்கங்கள் பிரதிட்டை செய்யப்பட்டு, இன்றும் பூஜைகள் நடந்து வருகின்றன. அந்தலங்களுள் சிலவற்றின் விவரம் :—

தானாக வந்து தடுத்தாண் டெனையின்ப
வானாகச் செய்தஇன்ப வானே பராபரமே.

சிதம்பரம்	ஸ்ரீ மூலநாதருள்பட 18 ரிஷிகள் சமாதி.
காஞ்சிபுரம்	காலங்கி நாதர், கடுவெளி சித்தர்
கும்பகோணம்	கும்பமுனி
மயூரேசம்	மச்சமுனி
சீர்காழி	சட்டமுனி
நாகப்பட்டினம்	அழுகண்ணி சித்தர்
இடைமருதூர்	இடைக்காட்டு சித்தர், நாரதரிஷி
மதுரை	சுந்தரானந்தர்
துவாரகை	பாம்பாட்டி சித்தர்
நாங்கணாச் சேரி	புண்ணாக்கீசர்
திருக்கணங்குடி	கொங்கணதேவர்
வைதீசுவரர் கோயில்	வசிட்டமுனி
திருவாரூர்	வால்மீகர்
காளஅஸ்தி	கருவூரார்
காசி	விசுவாமித்திரர்
ஆவுடையார் கோயில்	புலத்தியர்
கழுகுக்குன்றம்	கோரக்கர்
ருத்திராஸ்	காசியபர்
அருணாசலம்	கௌதமர்
கடையூர்	மார்க்கண்டர்
பாபவினாசம்	புலத்தியர் (மறுமுறை)
திருக்கடவூர்	சுந்தரானந்தர்
திருப்புவனம்	காலாங்கி தேவர்
திருக்கோவலூர்	காலாங்கி
திருப்பனந்தாள்	வரரிஷி

படிப்பற்றுக் கேள்வியற்றுப் பற்றற்றுச் சிந்தைநந்
துடிப்பற்றார்க் கன்றே சுகங்காண் பராபரமே.

திருப்பெருங்காவூர்	கன்னிச்சித்தர்
தென் மலை	வாதரிஷி
நெடுங்குன்றங்களில்	மூலவர்க்க சீடர்கள் பலர்
திருவாஞ்சியம்	கமலமுனி
கோடிக்கரை	கொங்கணவர்க்கம்
கதிர்காமம்	சுப்பிரமணியர்

அறைந்திட்ட ஆவினன்குடி, பரங்குன்றமப்பா
அழகான திருத்தணிகை கழுக்குன்றோடு
பறைந்திட்ட வேரகமும் செந்தூராகும்
பரிவான தலமாறும் நாமதாமே

"போகர் வாக்கியம்"

மேலே கண்ட தலங்களாகிய பழனி, திருப்பரங்குன்றம், திருத்தணிகை, திருச்செந்தூர், சுவாமி மலை இவ்விடங்களி லெல்லாம் போகநாதர் சமாதியிலிருந்ததாக அவரே கூறியுள்ளதைக் காண்க.

இப்படியாக சித்த முனி ரிஷிகள் யாவரும் அவ்வப் போது பல இடங்களில் சீடர்கள் முன்பு சமாதியில் இறங்கி, பிறகு சிலர் வெளி வந்து வேறு இடங்களிலும் சமாதியில் இறங்கியுள்ளனர். அவர்கள் சமாதியில் இருந்த இடங்கள் யாவும் கீர்த்தி வாய்ந்த வழிபடும் தலங்கள் ஆயின. அதைப் போக முனியே கூறுகிறார்.

'ஆனதொரு சித்தெல்லா மாடியாடி சித்தருந்தான்
ஞாலமதில் சிவதலங்க ளனேகமானார்'
நல்லதொரு சித்தரெல்லாம் சொருபமாகி
சேமப்பா அவரவரை சமாதி நின்று
செகம தனில் லிங்கமதாய்
மூலைத்திட்டாரே

—போகர் வாக்கு

சித்த திருவிகற்பஞ் சேர்ந்தார் உடல்தீபம்
வைத்தகர்ப்பூ ரம்போல் வயங்கும் பராபரமே.

இந்தியாவின் மற்றைய பிராந்தியங்களைக் காட்டிலும் தென்னாட்டில்தான் அதிகமாக சித்து முனிகள் சமாதியில் இருந்ததாகக் காண்பது பற்றியே சிவ தலங்கள் இங்கு அதிகமாக உள்ளன போலும். இத் தமிழ் நாட்டில் உள்ள சிவ தலங்கள் யாவும் மகத்தான சித்து புருடர்களின் சமாதிகளாக யிருப்பது பற்றி, இவைகள் தவ வலிமை மிகுந்த க்ஷேத்திரங்களாயின. இச் சித்து முனிகளில் சிலர் சமாதியினின்று வெளிப்படும் போதும், அந்த இடங்களில் தங்கும் போதும் சில யந்திரங்களைத் தாபித்தலும் உண்டு. அத்தகைய யந்திரங்கள் தாபிக்கப் பெற்ற இடம் பல வற்றிலும் பிரசித்தி பெற்றது சிதம்பரமேயாகும். தவிர இங்கு மூலநாதருள்பட அநேக சித்தர்கள் சமாதியிலிருப்ப தால் இஃது சிவ தலங்கள் யாவற்றுள்ளும் தலை சிறந்து விளங்குவதில் வியப்பில்லை. சமய குரவர்கள், நம்பி யாண்டார் நம்பி, சேக்கிழார் முதலியவர்கள் இங்கு வந்துதான் நன்மையை யடைந்தார்கள்.

இத்தலத்தில் நாதாக்கள் பலர் சமாதியி லிருப்பதைக் குறிக்கவே சிவவாக்கிய முனியும்

நட்ட கல்லும் பேசுமோ, நாதனுள் ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ என்றார்

சிவ வாக்கியர் மகா பிரசித்திபெற்ற சித்தர்களில் ஒருவர். இவர் மந்திர, யந்திர, தந்திர சாஸ்திரத்தில் நிபுணர். இவர் ஓர் முதிர்ந்த சிவயோகி. இவர் திருமூலர் சிட்டவர்க்கத்தைச் சேர்ந்தவர்,

நாதாக்களாகிய பதஞ்சலி, வியாக்கிர பாதர், நந்தீஸ்வரர், ஸ்ரீ மூலநாதர் உள்பட பலரும் சமாதியில்

சிற்பரமே தற்பரமே தெய்வச் சுருதிசொன்ன
அற்புதமே அன்பே அறிவே பராபரமே.

மூச்சடங்கி தவ நிலையில் இருப்பதைக் கண்டு அவர்கள் மார்க்கத்தை பின்பற்ற முயலுவதை விட்டு, வெளிப் பூசை நடத்துவதில் பயன் அதிகம் பெற முடியாது என்பதைக் குறிக்கவே மேலே கண்ட பாட்டைப் பாடினூர். அதாவது உள்ளே சமாதியிலிருக்கும் நாதாக்களை யறியுங்கள். அதுவே சிறந்தது என்கிறூர் இவர். இந்தக் கருத்து இவரது மற்றைய பாட்டுகளையும் சரிவர நோக்கினூல் தெள்ளெனப் புரியும். அதை யறியாத காரணம் பற்றியே பலரும் பலவிதமாக இவ்வருமையான செய்யுளை விளக்கம் செயத் துவக்கி விட்டனர். அந்தோ! மாணிக்க வாசக சுவாமிகளும் அது வரையில் சிவ பூஜை முதலியன செய்து வந்தவர், அநுபூதி நிலையை அடைந்த பின்னர் அப் பூஜையை நிறுத்தினூர். அதையே அவர் ஞானத் தாழிசையில்

"விழியாகிய மலர்கண்டபின் உயர் அர்ச்சனை யற்ருய்
மெய் நீரிடு மதப மந்திரம் விட்டாய்—சிவமுற்ருய்" என்ருர்.

நானும் சிரித்தேன்

(வித்துவான். கு. நடேசகவுண்டர்)

ஓரிடையன் தன் மந்தையிலிருந்த ஒரு நொண்டியாட்டினைக் காணுமல் தேடி அலைந்தான். தன் முயற்சி இனிப் பயன் தராது என அறிந்தபின், ஆண்டவனை நினைந்து வாய்விட்டுக் கூறி, "ஆண்டவனே காணுமற் போன என் நொண்டியாடு' என்பால் வந்து சேர்ந்தால் என் கைக்கிடாயினை வெட்டி உனக்குப் பொங்கலிட்டு அன்னதானம் செய்கின்றேன்" என்று வேண்டினுன். அதனை அருகில்

இருந்து கேட்ட அவன் மனைவி திடுக்குற்று, அவனை நோக்கி "உனக்கு அறிவு இருக்கின்றதா என்ன? நொண்டிக் கிடாய் மீறி மீறி விற்றால் பதினைந்து ரூபாய் விலை பெறும். கைக்கிடாயோ! ஐம்பது ரூபாய் பெறுமே! அதற்கு மேலே அன்னதானமாம்! பொங்கலாம்! பூசையாம்" என்று கூச்சலிட்டு 'அவ்வாறு வேண்டுதல் செய்யாதே' என மறுத்தாள். இடையன் 'உஸ்' என்று தன் வாய் மீது கையைவைத்துக் கொண்டு, இரையாதே; மெள்ளப் பேசு; நான் என்ன மூடனோ? நொண்டியாடு கிடைக்கட்டும்; கைக்கிடாயின் வால்மயிருங் கூடச் சாமிக்குக் கொடுக்கமாட்டேன்'. என்று குசு குசுவெனக் கூறினான். ஆசை மொழி கூறி விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டு பின்மோசம் செய்து சாமியை ஏமாற்றி விடலாம் என்று இடையன் எண்ணினான்.

ஆண்டவன் எங்கும் நிறைந்தவன், எல்லாம் அறிந்தவன். 'அகர உயிர்போல் அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து' என்ற ஞான சாத்திர மணம் அறியாதவன். அவன் அவ்வாறு எண்ணியதிலும் சொன்னதிலும் வியப்பில்லை. ஆனால் கல்வியறிவு பெற்றவர்களாய்க் கடவுளைப் பற்றித் திடமாய்ப் பேசுகின்றவர்களிலும் சிலர், சில வேளைகளில் மயங்கிப் பிறரைத் தம் சொல்லாலும் செயலாலும் வஞ்சித்து விடுகின்றனர். அதன்மேல் வஞ்சித்த தம்மை அறிவாளிகள் எனவும், தம்மால் வஞ்சிக்கப் பட்டோரை அறிவிலிகள் என்றும் நினைந்து மகிழ்தலும் செய்கின்றனர். உண்மையில் அவர்கள் அறிவாளிகள் தானா?

திருடுவது எளிது; திருட்டு வெளிப்படாமல் மறைப்பது அரிது. வஞ்சிப்பது எளிது; வஞ்சனை வெளிப்

அந்தக் கரணமெனும் ஆகாத பேய்களெனை
வந்துபிடித் தாட்ட வழக்கோ பராபரமே.

டாமல் மறைப்பது அரிது. தம்முடைய திருட்டேனும் வஞ்சனையேனும் வெளிப்படாமல் மறைக்கும் ஆற்றல் இல்லாதவர், 'திருடினேம்' 'வஞ்சித்தோம்' என்று மகிழ்வது பேதைமை யன்றோ? எல்லாரையும் வஞ்சித்து விடினும் ஒருவர் நினைக்கின்ற நினைப்பினூடே கலந்து நின்றும், அவ்வாறுதான் நிற்பதனை அவர் அறியாமல் வஞ்சிக்கின்ற ஒருவன் இருக்கின்றான். அவன் செய்யும் வஞ்சகத்தை யாரும் கண்டு பிடிக்க முடியாது. அவன் எல்லார் செய்வனவற்றையும் தான் காண்பான்; அவன் காண்கின்றான் என்பதையும் பிறர் அறியமாட்டார். அதனால் "நோக்காதே எவ்வளவும் நோக்கினான்" என்று தமிழ் மறை அவனைக் கூறும். இவ்வாறு வஞ்சகத்தில் தனக்கு மேற்பட்டார் இல்லாதவன் அவன் ஆகையால், வடமொழி மறையும் அவனைக் கள்வர் தலைவன் ஆகையால் (தஸ்கராணும் பதி) என்று வழுத்தும். நாம் செய்கின்ற அனைத்தையும் நாம் அறியாமே அவன் அறிகின்றான் என்பதை அறிந்தவரே அறிஞர் ஆவர்: இதனை

"வஞ்சித் தொழுகும் மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோம் என்று மகிழன்மின்—வஞ்சித்த
எங்கும் உளன் ஒருவன் காணும்கொல் என்றஞ்சி
அங்கம் குலைவது அறிவு என்றார் குமரகுருபர்.

(யாவரையும் = எல்லாரையும் அல்லது ஒருவரை யேனும். வஞ்சித்த = நாம் செய்த வஞ்சனைகளை;)

இவ்வாறு எங்கும் உளன் ஒருவன் காண்பான் என்ற அறிவு ஒருவருக்கு வருமேல், அவர் தாம் முன் செய்த வஞ்சனைகளை நினைந்து நினைந்து, எல்லாரையும் வஞ்சித்தோம் என மகிழ்ந்தோமே! நம்மையும் மறைத்து நமக்குள்ளே ஒருவன் இருப்பதை இதுவரையில் அறிந்திலமே என

ஐவரொடுங் கூடாமல் அந்தரங்க சேவைதந்த
தெய்வ அறிவே சிவமே பராபரமே.

இரங்குவர், ஏங்குவர். தம் பேதைமையை நினைந்து தாமே நகைப்பர். அங்ஙனம் கள்ளர்க்குக் கள்ளனாய் வஞ்சகர்க்கு வஞ்சகனா யுள்ளவனது திறமையை அறிந்தபின், தம் தோல்வியை ஒப்புக் கொண்டு திருநாவுக்கரசு அடிகள் கூறுவது:—

" கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க் காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியேன் ஆகி நின்று தேடினேன் நாடிக் கண்டேன் ;
உள்குவார் உள்கிற் றெல்லாம் உடன் இருந்து அறிதி என்று
வெள்கினேன் வெள்கி நானும் விலா இறச் சிரித்திட்டேனே"

இதன் கருத்து :—

கள்ளனாகிய நான் கண்டார் எல்லாம் என்னைப் பெருந் தொண்டன் என்று கொண்டாடி வணங்கும்படி, வேடத்தாலும் பேச்சாலும் ஆரவாரம் காட்டி, உண்மையில் அவ்வாறு இல்லாதவனாய்ப் பல காலத்தைக் கழித்தேன்; பின் அருளால் அப்பேதைமை நீங்கித் தெளிவு அறிவு பெற்றவன் ஆகி,

"திருமாலொடு நான்முகனும்—தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டு கொண்ட" பின் நினைப்பார் நினைப்பவற்றை எல்லாம் அந் நினைவினுடன் இருந்தே அறிகின்றாய்

என்பதை நான் அறிந்தேன். இதற்கு முன்னெல்லாம் நெக்கு நெக்கு நினைந்து உருகும் அன்பில்லாமல் நான் செய்த ஆரவாரத் தொண்டினைக் கண்டு என்னை நாணி நீ நகைத்து நின்றனை; என் இறைவனே! இன்று உன்னையும் பிறரையும் ஏய்த்ததாக நான் நினைந்திருந்து ஏமாந்து போனதை எண்ணி, உன் சிரிப்புக்கு எதிராக நானும் சிரித்திட்டேன்; உன் சிரிப்போ புன் சிரிப்பு. என் சிரிப்போ விலா எலும்பு ஒடியும்படி சிரிக்கின்ற வெடிச் சிரிப்பு.

அருளாகி நின்றசுகம் ஆகாமல் ஐயோ
இருளாகி நிற்க இயல்போ பராபரமே.

இப்படித் திருத்தொண்டின் நெறிவாழ வரு ஞானத் தவமுனிவர் ஆகிய அப்பர் சிரித்ததைக் கண்டு, வைணவப் பெரியாராகிய தொண்டரடிப் பொடியாழ்வாரும் இச் செய்யுளையே அடியொற்றிக் கூறிக்கொண்டு "நானும் சிரிக்கின்றேன்" என்று தாமும் சிரிக்கின்றார்; திருமாலை 34-ஆம் திருப்பாட்டில். நானும் என் செயலை எண்ணிச் சிரிக்கின்றேன். மனம் இருந்தால் நீங்களும் கூடச் சிரியுங்கள்.

THE DIVINE CHILD

Man is godlike as a child. As he grows, the child in him recedes from the view, and in some unfortunate cases, the child is completely lost. The possibilities of the sprout in the seed are visible in the face of the child. The latent realisation of godhead beams forth as its expression. The world and its attractions have no value yet. It seeks to play and why it knows not. Play it must, impelled by an irresistible urge from within. It knows " to be ", and more is beyond its ken.

To be and no more involves a high degree of spiritual elevation which few only are known to have achieved. Saint Arunagiri said "தடுங்கோள் மனத்தை; விடுங்கோள் வெகுளியை; தானம் என்றும் இடுங்கோள்; இட்டு நீவிர் இருந்தபடி இருங்கோள்". Wheremind is rendered motionless, where the sense of 'I and mine' istobe numbed, and where the sense of possession in lost in the cheer of gift, there is the neighbourhood of "*Being*." "I am as I am" is the Biblical Expression.And what is that state Jehova,

Jove or Lord! ***There*** hangs the realisation of Adwaita, the mukti of mankind and the bliss of the seeking Bhakta. Sri Skanda destroyed the demon of separation and discrimination ie. Soorapadma in the quality of universal love. In the union of love and love, in the union of love limited in the love universal, in the absorbtion of the Jeevathma in the Paramatma, is celebrated the Valli's wedding on the last day of Skandashashti. Just as other festivals Skandashashti festival is a dramatic representation of the highest philosophy of love and dissolution of all hatred and dislike in the spirit of God-Love. There is but one Lord! So I see His face (1) in the play of the cosmos. (2) in the instinct emergence of the realisation of the one Truth,—jnana, (3) in the dispelling of the troubles of the world at large, (4) in the firm conviction and belief of the one and only truth that abides (5) in the subjucation of the "I" and "mine," and (6) in the ultimate union with the Paramathman! Oh! The Divine child of six faces! Rama, Krishna, Skanda (Thou hast many names).

Make me thine, and with thee May I ever be.

(*Thiruppugal Mani*).

கண்ணிற் காண்பதுன் காட்சி கையாற்றொழில்
பண்ணல் பூசை பகர்வது மந்திரம்
மண்ணோ டைந்தும் வழங்குயிர் யாவுமே
அண்ணலே நின் அருள்வடி வாகுமே

(தாயுமான சுவாமிகள்)

No.1506 அசோகா MILD SCENTED ASOKA நெ.1506

ஷண்முகம் பிராண்டு

ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்

416 நூதன முறைகளில் நீடித்த உழைப்பிற்காக

உறுதியானதும் உத்திரவாதமுமான சரக்குகள்.

ஷண்முகம் பிராண்டு ஸ்டீல் டிரங்கு ஒர்க்ஸ்

புரொப்ரைட்டர் :

சி. ஞானசுந்தர நாயகர்

341, எஸ்பிளனேட், சென்னை—1.

ஷோ ரூம் : 1-14, பேக்கர் தெரு, சென்னை-1

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்புபெற்ற நகை வியாபாரிகள்

"ஸ்வர்ண மாளிகை"

A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co.,

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூல வீதி மதுரை.

Tel:—"FAITH' Estd:—1924 Phone:—118

வியாபாரக்குறி

N. K. M.

தங்கநாடா

நம் நாட்டுத் தொழில்களில் சிறப்புவாய்ந்த கைத்தறியால் சிறந்த நூதன முறைகளில் தயாரிக்கப்பட்ட பட்டு, நூல் ஜவுளிகளுக்கு நம்பிக்கையான இடம்.



கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்

மொத்தம் அண்டு சில்லரை வியாபாரம்,

53, கிடங்குத் தெரு, மதராஸ் 1.

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswami, 54, Bunder St. Madras